★★

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

ஈழநாடு

THE EELA NADU

தேசியதினசரி National Tamil Daily

மலர் 8 (25 8-66) இதழ் 195

பராபவ ஆவணி 9 ஜ: அவ்வ 8 வியாழக்கிழமை

## நீச்சல் வீரர் மிஹிர்சென் இன்று ஜிப்ரால்டரைக் கடக்கிறார்

ஜிப்ராலட்டர். ஆகஸ்ட் 24

இந்திய நீச்சர்வீரர் மிஹிர்சென், இன்று மொரோக்கோவிலிருந்து ஸ்பெயினுக்குத் தனதுநீச்சலை ஆரம்பித்துள்ளார்.

இ ர் இந்த நீச்சலைத் தொடங்க முன், நாளாந்தம் பல மணித்தியாலங்கள், பயிற்சி எடுத்துவந்துள்ளார்.

இவர் நீந்தும்போது, கம்பிவலையைப் பாவிக்கமாட்டார். கடற் சுறுக்களுக்கு எதிராகப் பாதுகாப்புக்காகவே இக்கம்பிவலை நீச்சல் வீரர்களால் பாவிக்கப்படுகிறது.

தனது அடுத்த நீச்சல் முயற்சி அடுத்த மாதம் டார்டெனிஸ்சை கடப்பதாக இருக்குமென மிஹிர்சென் அறிவித்துள்ளார். அதற்கடுக்க, அவர் பொஸ்பாரசைக் கடக்க முயற்சிசெய்வார்.

தான் இப்போது ஆரம்பித்துள்ள முயற்சிகள்தமக்கு வெற்றிபெறும் நம்பிக்கை இருப்பதாகஅவர் சொன்னார். (பி.டி.ஸி.)

# கல்வி மசோதாவில் பல புதிய திருத்தங்கள்

## மந்திரியின் அதிகாரங்களில் பல ரத்துசெய்யப்படும்

### பிரதிநிதிகள் சபை நிரந்தரக்குழு செய்துள்ள சிபாரிசுகள்

கொழும்பு, புதன்

**உயர்கல்வி மசோதாவில் பல புதிய திருத்தங்கள் செய்யப்படவிருக்கின்றன. இந்த மசோதாபற்றி ஆராய்ந்து சிபாரிசு செய்வதற்காக நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் சபை நிரந்தரக்குழு, பல்வேறு திருத்தங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத்திருத்தங்கள் ஏற்கனவே கல்வி மந்திரிக்கு அளிக்கப்படவிருந்த பல அதிகாரங்களைரத்துச் செய்யக்கூடியவையாக இருக்கின்றன.**

மசோதாவின் மூலப்பிரதியில் தேசியக்கல்வி சபையின் தலைவரையும், எட்டு அங்கத்தவர்களையும் நியமிக்கும் உரிமை கல்வி மந்திரிக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த அதிகாரங்கள் இப்போது கவர்னர் ஜெனரலுக்கு கொடுக்கப்படவிருக்கின்றன.

தேசிய கல்வி சபையின் கணக்கு விபரங்கள் யாவும் திறைசேரியினால் ஆடிட்டர் ஜெனரலின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படும் வகையில் வைத்துக்கொள்ளப்படும். மந்திரிக்கும் அதற்கும் சம்பந்தமிருக்காது.

சபையின் நிதிஆண்டு மந்திரியால் அன்றி சபையினாலேயே நிர்ணயிக்கப்படும்.

பொது உத்தரவுகளை விடுக்க மந்திரிக்கு அதிகாரம் இருக்காது. ஆனால் எழுத்துமூலமாக பொதுவான உத்தரவுகளை அவர் விடுக்கலாம்.

இன்று காலை பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிரந்தரக் குழுவின் அறிக்கையில் தேசிய சபைக்கு எப்படிப்பட்டவர்களை நியமிக்கவேண்டும் என்பது பற்றியும் கருத்துதெரிவிக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையின் பல்வேறுதுறைகளிலும் ஈடுபட்டுள்ள தகைமை பெற்ற, விஞ்ஞான அல்லது வேறு கல்வித்துறையில்சிறப்புடையவர்களை அல்லது கலைத்துறையிலோ, விஞ்ஞானத்துறையிலோ, தொழில்நுட்பத்துறையிலோ தகைமை பெற்றவர்களை இந்த சபைக்கு நியமிக்க வேண்டுமென்று சிபார்சு செய்யப்பட்டுள்ளது. இது ஒரு புது அம்சமாகும். இந்தக் கல்விச்சபைக்கு செனட் அங்கத்தவர்களை அல்லது பிரதிநிதிகள்சபை அங்கத்தவர்களை நியமனம் செய்வதையும் அறிக்கையின் இன்னொரு ஷரத்து ரத்துச் செய்திருக்கின்றது.

## சுதந்திர எண்ணத்துடனேயே மந்திரிகளை வரவேற்கின்றோம்

### தமிழரசு வாலிபமுன்னணி கூட்டத்தில் எஸ்.ஜே.வி

மாவிட்டபுரம்,புதன்

**மந்திரிகளுக்கு முன்பெல்லசம் கறுப்புக்கொடி காட்டிய நாங்கள் இன்று மலர்மாலைகள் சூட்டி வரவேற்புகள் அளிக்கின்றோம். இப்படி வரவேற்பளிப்பதற்கு அடிமை மனப்பான்மை அல்ல காரணம். சுதந்திர எண்ணத்துடனும் சொந்தவிருப்பத்துடனுமே அவர்களை இன்று மலர்மாலைகள் சூட்டி வரவேற்கின்றோம்.**

இவ்வாறு தமிழரசுக் கட்சித்தலைவர் திரு.எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காங்கேசன் துறையில் நடைபெற்ற தமிழரசு வாலிப முன்னணியின் பொதுக் கூட்டத்தில் பேசும்போது கூறினார்.

வாலிப முன்னணித்தலைவர் திரு.செ.இராசதுரை எம்.பி தலைமையில் கூட்டம் நடைபெற்றது,

திரு. செல்வநாயகம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

''இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் தொடர்ந்தும் தமிழர்களாக வாழ ஐக்கிய தேசியக்கட்சி [illegible] தனுல் நாம் ஐக்கியதேசியக் கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கமொன்றினை உருவாக்கினோம்''. சிறிதுகாலம் நாம் கறுப்புக்கொடி பிடித்ததற்கு காரணம் எமக்குவிருப்பமில்லாத செயல்களைச் செய்யும் மந்திரிகள் வருகிறார்களேஎன்பதுதான். இவர்களுக்கு நமது மறுப்பைக் காட்டும் வகையிலேதான் கறுப்புக்கொடிபிடித்தோம். இது நமது மரியாதையைச் சற்று உயர்த்தியுள்ளது. எமக்கு விரோதமாக அரசாங்கம் நடைபெற்றபோது நாம் அதனை எதிர்த்தோம்,

(3-ம் பக்கம்பார்க்க)

## 'தொலைபேசிப் பயமுறுத்தல்கள் எனக்கு பீதி அளித்தன'

### கமிஷன்முன் பதியுதீன்முகம்மது சாட்சியம்

கொழும்பு, புதன்

முன்னாள் கல்வி மந்திரி திரு. பதியுதின் முகம்மதும், நிதி அமைச்சின் முன்னாள் பாராளுமன்றக் காரியதரிசியான திரு. ஜோர்ஜ் ராஜபக்சவும், யாழ்ப்பாணம் அதிமேற்றாணியார் வண. எமிலியானஸ் பிள்ளைக்கும், இப்போது உள்ளூராட்சி மந்திரியாக இருக்கும் திரு. எம். திருச்செல்வத்துக்குமிடையே 1962-ல் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் பற்றி நடைபெற்ற சம்பாஷணைகளை தாம் ஒலிப்பதிவு செய்யப்பட்ட 'டேப்' மூலம் கேட்டதாக, இன்று தொலைபேசி ஒற்றுக் கேட்டல் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினர். அத்துடன் கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணம் தொகுதியில் போட்டியிட்ட தமிழரசுக் கட்சி அபேட்சகர் திரு. சி. எக்ஸ். மாட்டினுக்கும், அப்போது சுகாதார மந்திரியாகவிருந்த திரு. ஏ. பி. ஜயசூரியாவுக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளை விபரிக்கும் ஒரு தொலைபேசி சம்பாஷணையும் தாம் கேட்டதாக அவர்கள் கூறினர்

இவர்கள் இருவரும் தமது சாட்சியங்களைத் தொலைபேசி ஒற்றுக் கேட்டல் கமிஷனர் திரு. என். சிவஞானசுந்தரம் முன்னிலையில் ஒப்படைத்தனர்.

கமிஷன் முன்னிலையில் ஆஜரான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அந்தரங்க சாட்சியமளித்தார்.

40 வயதான வழக்கறிஞரும், மூக்கிகலத் தொகுதி எம். பி. யுமான திரு. ஜோர்ஜ் ராஜபக்ச சாட்சியமளிக்கையில், ஒரு சமயம் தான் அலரி மாளிகைக்கு அப்போது மந்திரியாகவிருந்த திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவைச் சந்திக்கப் போயிருந்த போது ஒலிப்பதிவுக் கருவியொன்று அங்கு போட்டுக் காண்பிக்கப்பட்டதையும், திருமதி பண்டாரநாயக்கா, திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, பாதுகாப்பு அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாகவிருந்த திரு. என். கியூ. டயஸ் ஆகியோர் அதைக் கேட்டுக்கொண்டிருந்ததையும் தாம் கண்டதாகவும் கூறினார். யாழ்ப்பாண அதிமேற்றிராணியாருக்கும் திரு. திருச்செல்வத்துக்குமிடையே நடைபெற்ற தொலைபேசி சம்பாஷணையையும், இன்னுமோர் தொலைபேசி சம்பாஷணையை

(8-ம் பக்கம் பார்க்க)

## உடுவில் கொலை வழக்கு: எதிரிக்கு 5 வருட கடுழியம்!

யாழ்ப்பாணம், வியா.

உடுவில் கொலைவழக்கில் எதிரிக்கு நீதியரசர் திரு. பி. ஸ்ரீஸ்கந்தராசா நேற்று ஐந்துவருட கடுழியச்சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வந்த இவ் வழக்கில் ஜூரி சபையினர் எதிரி கடுங்காயம் விளைவித்ததாக ஐந்து இரண்டாகப் பிரிந்து தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினார்.

இவ்வழக்கில் உடுவிலைச் சேர்ந்த பரராசசிங்கத்தை அதே ஊரைச் சேர்ந்த ரத்தினம் குமாரதாசன் என்பவர் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நேற்று நீதியரசர் எதிரியின் வளர்ப்புத் தாயான அன்னலட்சுமியையும் எச்சரிக்கை செய்தார். இந்த வழக்கு விசாரணையில் சாட்சியமளித்த பாலசுந்தரம் சாட்சிக் கூண்டை விட்டு வெளியேறியபோது அன்னலட்சுமி சாட்சியைப் பார்த்து, 'நல்லா கவைத்துப் போனாய், சோடாக் குடியென்று' நீதியரசரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததைத் தொடர்ந்தே நீதியரசர் அவரை எச்சரித்தார்.

''உனது மகனுக்கு சிறைத் தண்டனை விதித்திருப்பதால் உன்னை மன்னித்துக் கொள்கிறேன், அல்லது இப்படி நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்குசிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டியநிலைமை ஏற்பட்டிருக்கும் என்று நீதியரசர் அன்னலட்சுமியைப் பார்த்துச் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம்

### விளம்பரம்

1. இதன்கீழ்க்காணப்படும் வேலைக்குப் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

2. கேள்விப் பத்திரங்கள் ரூபா 25-00 கட்டியதன் பேரில் இச்சந்தோரில் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் 13-9-66-ந் திகதி காலை 9 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

4. கேள்விப் பத்திரங்கள் தலைவர், கிராமசபை, இரணைதீவு என்ற விலாசத்துக்கும், உள்ளூராட்சி உதவி அதிபர் கந்தோர், புதிய கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கும் பதிவு செய்து அனுப்புதல்வேண்டும்.

5. வேலை: யெற்றி போடல்.

வேலையின் விபரங்கள் யாவும் மேற்படி கந்தோரிலும், உள்ளூராட்சி உதவி அதிபர் கந்தோரிலும் பெற்றுக்கொள்ளலாம்.

ச. தோமாஸ்,
இரணைதீவு கிராம
936 சபைத் தலைவர்.

---

# 'உபகரணங்கள் கிடைப்பது பெரிய சங்கடமாகவுள்ளது'

## கார் சொந்தக்காரர் சங்க கூட்டத்தில் எம்.பி.கவலை

யாழ்ப்பாணம், வியா. 'கார்களுக்கான உபகரணங்களைப் பெறுவதில் இப்போது மிகவும் சங்கடமான நிலைமை ஏற்பட்டுள்ளது. அதிலும் பேஜோ-வோக்ஸ் வாக்கன் போன்றகார்களின் உபகரணங்களைப் பெறுவது மிகவும் சங்கடமானநிலைமையாக இருக்கிறது. அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவேண்டும்.'

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற பேஜோ—வோக்ஸ்வாக்கன் கார்களின் உரிமையாளர் சங்க அங்குரார்ப்பண க்கூட்டத்தில் பேஜோகார் சொந்தக்காரரும், சாவகச்சேரி எம்.பியுமான திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு சொன்னார்.

இந்தச் சங்கத்தில் இந்த இருவகைக்கார்களின் சொந்தக்காரர்களும் அங்கத்தவர்களாகச் சேர்ந்துகொண்டனர்.

பின்வருவோர் நிர்வாகிகளாகத்தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. வி. என். நவரத்தினம் எம் பி., உபதலைவர்: திரு. சி. எம். தர்மலிங்கம், தனாதிகாரி: திரு. எஸ். கே. துரைசிங்கம், இணைக்காரியதரிசிகள் திருவாளர்கள் எம் பஞ்சலிங்கம், எம். எஸ். ராஜசிங்கம். மூவர்கொண்ட கமிட்டி ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

REGAL—JAFFNA
NOW SHOWING
HAROLD LLOYD
in
THE FUNNY SIDE OF LIFE

நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஸ்ரீகாந் - ஜெயலலிதா
நடித்த
வெண்ணிற ஆடை

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
கல்யாணகுமார் - தேவிகா
நடித்த
அழகு நிலா

மகாத்மா தியேட்டர்
(நெல்லியடி)
தினசரி 6-30-க்குமட்டும்
ஆயிரத்தில் ஒருவன்
பி.ப.4மணி. 9-30
36 HOURS
M.G.M's (Panavasion)

இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணா (திருமலை)



ரி. எம். சௌந்தரராஜன்
பி. எஸ். சரோஜா
எம். ஆர். ராதா, மனோகர்,
சாரதா, லட்சுமி, ராஜம்
மற்றும் பலர் நடித்த
அருணகிரிநாதர்

---

## கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்றோர்

மாவிட்டபுரம், புதன் தமிழரசு வாலிப முன்னணியின் பதினோராவது மாநில மகாநாட்டினையொட்டி நடத்தப்பட்டகட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றோர்கள் விபரம் வருமாறு:

அமரர் வன்னியசிங்கம்:
பொ. சதானந்தன் (காங்கேசன்துறை), ப. கணேசலிங்கம் (புத்தூர்.)

உலகத் தமிழர் நிலை:
ஆ. பஞ்சலிங்கம் (பருத்தித்துறை), சோ. யோகநாதன் (தெல்லிப்பழை)

தமிழ்ப் பல்கலைக்கழகம்
கு. பாலசுப்பிரமணியம் (வண்ணார்பண்ணை), க.பரமசாமி (கொக்குவில்கிழக்கு), க. மனோகரநேரு (கோப்பாய்)

ஈழத்தமிழரின் உரிமைப்போர்:
மணிசோமசுந்தரம் (மண்டைதீவு) வ. இரத்தினதுரை (புத்தூர்.)

ஈழத்தில் இணைப்பாட்சி:
இ. இராசகோபால் (மயிலிட்டி வடக்கு), செ. கோகுலமணி (மட்டக்களப்பு)

---

## வைத்தியம்

தொய்வு, கசம், நீரிழிவு, சீதபேதி முதலிய வலை கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோசி இலவசம். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாச பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

## தேர்தற்கொலை வழக்கில் எதிரிக்கு 10 வருட கடூழியச்சிறை

காலி, புதன் காலஞ் சென்றவர் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவாளர். எதிரி யு என் பி யின் ஆதரவாளர். கடந்த தேர்தலில், பெந்தர எல்பிட்டிய தொகுதியில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த எஸ் எல் எப் பி அபேட்சகர் திரு. அல்பேட் காரியவாசத்திற்காககாலஞ் சென்றவர் வேலைசெய்தார். யானைப்பாகனாகத் தொழில் புரியும் எதிரி யு என் பி அபேட்சகரான திரு ஆர் ஜி சமரநாயக்காவுக்காக வேலை செய்தார்.

தேர்தலில் திரு. ஆர் ஜி. சமரநாயக்காவை எதிர்த்த போதும், காலஞ்சென்றவர் புதிய எம் பிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் கலந்து கொண்டார். அச்சமயம் எதிரி அவரை அங்கு வைத்து கத்தியால் குத்திக் கொலை செய்தார்.

காலி அசைஸ் நீதவான் ஜி பி ஏ சில்வா முன்னிலையில் எல்லா தனபத்தகம கொலை வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது, மேற்கண்ட விபரங்கள் வெளியாகின

எதிரி கைமோசக்கொலை செய்ததை ஏற்றுக்கொண்ட நீதவான், அவருக்குப்பத்து வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

---

## ஜே. ஆர். அஞ்சலி

மாவிட்டபுரம், புதன் வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கத்தின் மாமியாருடைய மறைவுக்கு ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, திரு. டி.பி. அத்தப்பத்து, உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் ஆகியோர் நேரிற்சென்றுதுக்கம் தெரிவித்தனர்.

---

# ஆராய்ந்து ஆக்கப்பட்ட நூல் திருக்குறள்

## வித்தியாலய கலை விழாவில் மட்டுநகர் எம்.பி. உரை

கொடிகாமம், செவ்வாய் ''உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள நூல்களில் பைபிள் முதலாம் இடத்தையும், குர்ஆன் இரண்டாம் இடத்தையும் குறள் மூன்றும் இடத்தையும் வகிக்கின்றன. குறள் தனி மனிதனின் கருத்தினால் உண்டானதல்ல. பலதத்துவ ஞானிகளின் முடிவுகளை ஆராய்ந்து அதன்படி ஆக்கப்பட்டதாகும் என்று ஐரோப்பிய ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அவர்கள் கருத்து உண்மையே'' இவ்வாறு மட்டுநகர் முதலாவது எம். பி. செ. இராசதுரை உசன் இராமநாதன் வித்தியாலய விஞ்ஞான கூடக்கட்டிட நிதிக்காக நடாத்தப்பட்ட கலைவிழா [illegible] கூறினார்.

கலைவிழா சாவகச்சேரி எம். பி.வி.என். திரு. நவரத்தினத்தின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

''மற்றவர்கள் பொறுமைப்படும் அளவுக்கு வடக்கும், கிழக்கும் ஒன்றுபட்டிருப்பது அன்பின் பிணைப்பினாலேயாகும்'' என்று அவர் கூறினார்.

கலைவிழாவில் திருகோணமலை எம். பி. மாணிக்கராசாவும் கலந்துகொண்டார். விழாவில் கொக்குவில் கலாபவன மாணவிகளின் பரத நாட்டியமும், மற்றும் சில பாடசாலைகளின் நாட்டிய நிகழ்ச்சியும், ஸ்ரீமுருகன் நாடகமன்றத்தாரின் 'நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால்' என்ற நாடகமும் இன்னிசையும் இடம்பெற்றன.

---

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

வீடு

புதிய பஸ் நிலையத்திற்கு அருகே, கேந்திர ஸ்தானத்தில் வியாபார நிலையமாகவும் வீடாகவும் பாவிக்கக் கூடிய குழாய்நீர், மின்சார, தொலைபேசி வசதிகளைக் கொண்ட மாடிக்கட்டிடம் வாடகைக்கு உண்டு விபரங்களுக்கு டாக்டர் கோபால பிள்ளை, பெரியகடை, யாழ்ப்பாணம். 887

### விற்பனைக்கு

கார்

C E ஆஸ்டின் (Austin) 10 எண்ணுரேத்துக்கு மேல் நம்பர் உள்ள கார் விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு பகல் 2 மணிக்கு மேல் நேரில் சந்திக்கவும். க. மாணிக்கம், 15/1, மலர் மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 886

விண்ணப்பப்படிவம்

தமிழ் தட்டச்சாளர் பரீட்சை விண்ணப்பப்படிவத்திற்கு 6 பத்து சத முத்திரையுடன் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தகக் கல்வி நிலையம், திருநெல்வேலி 890

ஆலையும் கடையும். காணியும்

பூநகரி-மன்னார் பிரதான வீதியில், கரியாலை, நாகபடுவான் குடியேற்றத்திட்டத்திற்குக்கிட்ட பல்லவராயன் கட்டில், நெல்குற்றும் மிளகாய் அரைக்கும் ஆலையும், நான்கு அறைகளுடன்கூடிய பலசரக்கு, தேநீர்க்கடையும், (தளபாடங்களுட்பட) கிணற்று வசதியோடுபத்துப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரம்: அ செல்லையா, மே/பா செ. கதிரவேல் ஆசிரியர், குப்பிழான், சுன்னாகம். 885

### காணவில்லை

கணபதிப்பிள்ளை என்பவரை 12-8-66-ல் இருந்து காணவில்லை. சுமார் 5 1/2 அடி உயரமும் 22 வயதும் கறுப்பு நிறமும் ஒல்லியான தேகமும் உடையவர். பற்களில் இரண்டு உடைந்துள்ளன. வலிப்பு நோயால் விழுவதனால் உடம்பிலும் நாடியிலும் காயங்கள் உள்ளன. இரவில் பார்வை குறைந்தவர். விவேகமற்றவர். கரும்பச்சை நிற சாரம் அணிந்திருந்தார். காண்பவர்கள் அண்மையிலுள்ள பொலிசில் ஒப்படைக்கவும். அல்லது அந்தோனி சின்னக்குட்டி, சரவணை மேற்கு, வேலணைக்குத் தெரிவிக்கவும். 892

ஸ்டமிஹமரும் உடுப்புகளும்

18-8-66 அன்று கச்சேரி பஸ் நிலையத்தில் ஒலைப் பையுடன் காட்டுக் கந்தோருக்குரிய ஸ்டமிஹமர் இல. J III 1-ம், உடுப்புகளும் தவறிவிட்டன கண்டெடுத்து ஜே. பஸ்தியான் பிள்ளை, 54/2, சந்தன மாதா கோயில் ஒழுங்கை, சுண்டிக்குளி என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் ரூபா 25/- சன்மானமாக வழங்கப்படும். 884

### கல்வி

வகுப்புகள்

எதிர்வரும் மார்கழி G. C. E. பரீட்சைக்காக சுருக்கெழுத்து, கணக்கியல், வர்த்தகம், பொருளாதாரம், கலை, விஞ்ஞானம் (தமிழ்/ஆங்கிலம்) விசேஷ வகுப்புகள். 31-ந் தேதிக்கு முன்சேரவும். வர்த்தகக் கல்லூரி, (ஸ்தாபிதம் 1924) பருத்தித்துறை/வதிரி கரவெட்டி. 889

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணு ஆயுதபாதுகாப்பு: சர்வதேச உடன்படிக்கை

## எதியோப்பிய கருத்துக்கு இந்தியா வரவேற்பு

ஜெனிவா, ஆக. 24

ஜெனிவாவில் நடைபெறும் ஆயுதப் பரிகரண மகாநாட்டில் எதியோப்பியா சமர்ப்பித்துள்ள தீர்மானத்தை இந்தியா வெகுவாகப் பாராட்டி வரவேற்கின்றது.

சர்வதேச உடன்படிக்கையொன்றின்மூலம் அணு ஆயுத பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டுமென்று எதியோப்பியா தனது தீர்மானத்தில் குறிப்பிட்டிருக்கின்றது.

இந்தத் தீர்மானம் நடைமுறை சாத்தியமானது. யாவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்று. சமாதானத்துக்கு அடிப்படையாக விளங்கக் கூடியது என்று இந்தியப் பிரதிநிதி இந்தத் தீர்மானத்தை வரவேற்று மகாநாட்டில் பேசுகையில் கூறியுள்ளார்.

இந்தத் தீர்மானத்தை ஐ. நா. ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் இந்தியப் பிரதிநிதி வலியுறுத்திப் பேசியுள்ளார்.

### ஐ. நா. தலைவர்

ஐ. நா.வின் பொதுச் சபைத் தலைமைப் பதவிக்கு ஆப்கானிஸ்தான் தனது நிரந்தரப் பிரதிநிதியை ஒரு வேட்பாளராக நியமித்திருக்கின்றது.

## ஆயிரக்கணக்கான சீனர்கள் பீகிங்கில் ஆர்ப்பாட்டம்

### பழைய கொள்கைகளை எதிர்த்து புதிய இயக்கம்

ஹாங்காங், ஆக. 24

சீனாவில் பழைய கொள்கைகள், பழக்கவழக்கங்கள் கலாசாரங்கள் ஆகியவற்றுக்கு எதிரான ஒரு வன்முறை இயக்கம் இப்போது உருவாகியுள்ளது.

நேற்று இந்தப் பழைய பழக்கவழக்கங்கள் கொள்கைகள் போன்றவற்றுக்கு எதிராக ஆயிரக்கணக்கானவர்கள் பீகிங் தெருக்களில் ஆர்ப்பாட்டங்கள் செய்தனர்.

தெருக்களில் எழுதப்பட்டுள்ள பழைய சுலோகங்களை அழித்துப் புதிய சுலோகங்களை அவர்கள் எழுதினார்கள். சிவப்பு காவலர்கள் என்று தம்மை அழைத்துக் கொள்ளும் இந்த இளைஞர்கள் கிறிஸ்தவ தேவாலயங்களின் சுவர்களில் எழுதப்பட்டுள்ள பழைய வாசகங்களை அழித்து புது சுலோகங்களை எழுதினார்கள். யன்னல்களை உடைத்தெறிந்து கோஷங்களை உரத்துக் கோஷித்தார்கள். சில வாலிபர்கள் பீகிங் தெருக்களில் மட்டுமின்றி வேறுபல நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் செய்தனர். கிறிஸ்தவ தேவாலயங்களில் நுழைந்து அவர்கள் நாசம் விளைவித்தனர்.

## பிரமபுத்திரா நதியில் பெருவெள்ளம்

### ஏராளமான கிராமங்கள் நீருக்குள் ஆழ்ந்துவிட்டன

புதுடில்லி, ஆக. 24

பிரமபுத்திரா நதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது. அபாய அளவுக்கு சுமார் 10 அங்குலம் உயரத்துக்கு வெள்ளம் பாய்வதாகக் கருதப்படுகின்றது. அஸ்ஸாமில் வடகிழக்குப் பகுதிகளின் ஏராளமான இடங்கள் நீரில் ஆழ்ந்துபோய் விட்டன. ராஜஸ்தான்பகுதியில் 60 ஏக்கர் நிலப்பரப்பு நீரில்மூழ்கிப்போய்விட்டது. சுமார் 21 கிராமங்கள் நீரினால் மூழ்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றது.

பஞ்சாப் பகுதியில் யமுனையும் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இப்பிரதேசத்தில் சமீபகாலமாக அடைமழை பெய்வதே இதற்குக் காரணம். இப்பகுதியில் சுமார் 50 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பீகாரில் 17 மாவட்டங்களில் 8 மாவட்டங்கள் தண்ணீருக்குள் அமிழ்ந்து போயுள்ளன. ரஸ்தாக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதால் உணவு தான்யங்கள் எடுத்துச் செல்வதிலும் போக்குவரத்துச் செய்வதிலும் கஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## பிரிட்டனின் பாதுகாப்பு தொடர்ந்திருக்கும் —துங்கு

கோலாலம்பூர், ஆக. 22

இந்தோனேஷியாவுடன், போர் நிறுத்தப்பட்ட போதும், பிரிட்டனுடன் உள்ள தனது பாதுகாப்பு ஒப்பந்தத்தை வைத்திருப்பதென மலேஷியா தீர்மானித்துள்ளதாகப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஜாகர்த்தாவுடன் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட சமாதான உடன்படிக்கை பற்றிப் பாராளுமன்றத்தில் பேசுகையில், "பிரிட்டனிடமுள்ள பாதுகாப்பு உடன்படிக்கையை நாம் தொடர்ந்து வைத்திருப்போம். வெளியிலிருந்து நாம் தாக்கப்பட்டால், எமக்கு உதவியளிக்கும் பொறுப்பு பிரிட்டனையும், பொதுநலநாடுகளையுமே சாரும்" என்று துங்கு குறிப்பிட்டார்.

(பி. டி. ஸி.)

## தாதுப்பொருள் உற்பத்தியில் ஆசியாவின் முன்னேற்றம்

பாங்கொக், ஆக. 24

ஆசியா, கடந்த இரண்டு வருடங்களில், தாதுப் பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கியுள்ளது என்று ஐக்கியநாடுகளின் உபகுழுவின் அறிக்கை ஒன்று தெரிவித்துள்ளது. தாதுப் பொருட்களின் ஆராய்ச்சி, தொழில் நுட்பச் செய்முறை ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றமே இதற்குக் காரணம் என்றும் அக்குழு அறிவித்துள்ளது.

ஆசியாவுக்கும், தூர கிழக்குமான பொருளாதாரக் கொமிஷனின் உபகுழு. விளைபொருட்கள், தொழில் நுட்பாளர் போதாமையினால் பாதிக்கப்பட்டுள்ள சிறிய ஆசிய நாடுகளுக்கு அதிக பலனுள்ள உதவி அளிக்கப்பட வேண்டுமென்று தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

(பி. டி. ஸி.)

## சச்சாருக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வியா.

யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்திருக்கும் இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் டாக்டர் பீம்சென் சச்சாருக்கு இன்று வடமாகாணத்திலுள்ள இந்திய வமிசாவளியினரின் சார்பாக இலங்கை-இந்தியர் சங்கம் தமது காரியாலயத்தில் ஒரு வரவேற்பொன்றை அளிக்கவிருக்கின்றனர். முதலியார் திரு. செ. சின்னத்தம்பி தலைமைவகிப்பார்.

கொழும்பு, புதன்

வெளிநாடுகள் சிலவற்றில் கையாளப்படும் முறைகளை இலங்கையிலும் ஆயுர்வேத வைத்தியத்துறையில் புகுத்துவதற்கு சுகாதார அமைச்சு ஆலோசித்துவருகின்றது.

இலங்கைக்கு அருகாமையில் உள்ள சிலநாடுகளில் நடைமுறையில் இருக்கும் உள்நாட்டு வைத்தியமுறைகளுக்கும், இலங்கையில் உள்ள வைத்திய முறைகளுக்கும் நெருங்கிய தொடர்பிருப்பதே. இப்போது சுகாதார அமைச்சு இம்மாதிரி ஆலோசிப்பதற்குக் காரணம் என்று கருதப்படுகின்றது.

இந்தியாவில் கேரளாவிலும், சீனாவிலும் ஆயுர்வேத முறைகளை நேரிலாராய்ந்து வருவதற்காக ஓர் ஆராய்ச்சியாளர் கோஷ்டியை அனுப்புவதற்கு ஏற்கனவே அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது.

கேரளத்தில் 'பஞ்சகர்மம்' என்று ஒரு பிரசித்தி வாய்ந்த ஆயுர்வேத வைத்திய முறை இலங்கை அரசாங்கத்தைக் கவர்ந்திருப்பதாகக் கருதப்படுகின்றது.

நரம்பு இயக்கத்தை உற்சாகமுறச் செய்வதற்காக ஊசிகளை உடலில் செலுத்து முறையைப்பற்றி சீனாவில் அறிந்துவருவதற்கு இலங்கைத் தூதுக்குழு ஒன்று அனுப்பிவைக்கப்படஇருக்கிறது.

## நிதி பற்றாக்குறை காரணம்

ஜாகர்த்தா, ஆக. 24

நிதி பற்றாக்குறை என்று கூறி மலேஷியாவில் மீண்டும் தூதரகம் ஒன்றை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை இந்தோனேஷியா ஒத்திவைத்துள்ளது.

## வீடு தீப்பற்றியது

மன்னார், புதன்

மன்னார் பெரியகடை வட்டாரத்திலுள்ள திரு. எஸ். கனகரத்தினம் என்பவரின் வீடு தீப்பற்றிக்கொண்டது. தண்ணீர்த் தட்டுப்பாடாக இருந்தபோதிலும், அயலவர்களின் முயற்சியினால் தீபரவாமல் தடுக்கப்பட்டது. இத்தீவிபத்துக்குரிய காரணம் இதுவரையும் தெரியவில்லை. பொலிசார் விசாரணை செய்கின்றனர்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

### சென்னை அரசாங்கம் யோசனை

1967-ம் வருடம் பெப்ரவரி மாதம்மூன்று கட்டங்களில் நான்காவது பொதுத் தேர்தல்களை நடத்துவதற்கு மூன்று தேதிகளை சென்னை அரசாங்கம் தேர்தல் கமிஷனுக்கு அறிவித்திருக்கின்றது.

### தி. மு. க. வெற்றி பெறும்

வரும் தேர்தலில் தி. மு. க. சென்னையில் வெற்றி பெறலாமென்று புவனேஸ்வரத்தில் சிதந்திரக்கட்சியின் கூட்டுக்காரியதரிசி திரு. தண்டேகர் கூறியுள்ளார்.

### திரு. இஸ்மாயில்

மலேசியா, சிங்கப்பூர், இலங்கை ஆகியநாடுகளில் சுற்றுப்பயணம் செய்துவிட்டு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் திரு. முகமது இஸ்மாயில் எம். பி. சென்னை திரும்பியுள்ளார்.

### தமிழ்நாடு மேல் சபை

தமிழ்நாடு மேல்சபைக்கு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான கடைசித்தினம் ஆகஸ்ட் 24 என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### தேயிலைத் தோட்டத்தில்

திருடர்களைப் பிடிப்பதற்காக சென்ற ஒரு வெள்ளைக்காரரான பிரிஸ்லி என்ற தோட்டத்துரை கைத்துப்பாக்கி வெடித்ததினால் மரணமானார். இந்தச் சம்பவம் அம்பா சமுத்திரத்துக்கருகில் நடந்தது. அவர் வழுக்கி விழுந்தபோது அவருடைய கையிலிருந்து கைத்துப்பாக்கி வெடித்ததாகக் கூறப்பட்டது.

### அரசாங்க அதிகாரி கைது

தானியம் கடத்த உடந்தையாகவிருந்த அரசாங்க அதிகாரியொருவர் விழுப்புரத்தில் பிடிபட்டார். 85 மூடை ராகியும்பிடிபட்டது.

## சனசமூக நிலையங்களை சச்சார் பார்ப்பார்

குரும்பசிட்டி புதன்

யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கி நிற்கும் இந்தியத் தூதுவர் கலாநிதி பீம்சென் சச்சார் யாழ். மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங்களின் வேலைத்திட்டங்கள் சேவைகள், பொது மக்களுக்கு ஆற்றும் பணிகள் முதலானவற்றை நேரில் அறிந்துகொள்ளும் பொருட்டு குரும்பசிட்டியிலுள்ள இரு சனசமூகநிலையங்களுக்கு 28-ந் திகதி விஜயம் செய்யவிருக்கின்றார். முதலில் இரவு 7 மணிக்கு குரும்பசிட்டி உதயதாரகை சனசமூக நிலையத்துக்கு வரவிருக்கும் இந்தியத்தூதுவர் சன்மார்க்க சபைக்கும் விஜயம் செய்வார். இந்தியதூதுவருக்கு இவ்விருநிலையங்களிலும் மிகச் சிறப்பான வரவேற்பு உபசாரம் அளிக்க ஏற்பாடுகள்செய்யப்பட்டுள்ளன.

## எருக் குவியலில் இரு சிறுவர்கள்

உடுப்பிட்டி, புதன்

எருக்குவியலுக்குள் மூடப்பட்டு மூச்சுத் திணறி மயக்கமுற்ற நிலையில் சோர்ந்து கிடந்த இரு சிறுவர்கள் இங்குள்ள வயலொன்றில்கண்டுபிடிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டனர். கரணவாய் தெற்கிலுள்ள கிராய் வயலிலே இது நடந்தது.

வயலுக்கு எரு ஏற்றிச் சென்ற டிராக்டரில் எருக்குவியலின்மேல் இரு சிறுவர்கள் ஏறி உட்கார்ந்துகொண்டார்களாம். டிராக்டர் வயலை அடைந்ததும் டிராக்டரை ஓட்டிய சாரதி சிறுவர்கள் எருக்குவியலின்மீது இருப்பது தெரியாது விசையைத் தட்டியதும், பெட்டி உயர்ந்து எரு நிலத்தில் கொட்டப்பட்டதாகவும், அக்குவியலுக்குள் சிறுவர்கள் அகப்பட்டுக் கொண்டுவிட்டதாகவும் சிறுவர்களைக் காணாத பெற்றோர்களும், உற்றார்களும் எருக்குவியலை கிளறியபோது சிறுவர்கள் மயக்கமுற்ற நிலையில் கிடந்தனராம்.

## நியமனம்

யாழ்ப்பாணம், புதன்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் பழையமாணவி செல்வி சற்குணநாயகி தம்பிராசா யாழ்ப்பாணம் கனகரெத்தினம் மத்தியமகா வித்தியாலயத்திற்கு 1-9-66 முதல் வர்த்தக ஆசிரியையாக நியமனம் பெற்றுள்ளார்.

## நீக்ரோக்களுக்கு கல்வீச்சு

சிக்காக்கோ, ஆக. 24

சிக்காக்கோவின் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற நீக்ரோ ஆர்ப்பாட்டக்காரர் மீது கேலி செய்து கூச்சலிட்டபடி வெள்ளையர்கள் செங்கட்டிகளாலும், போத்தல்களாலும் எறிந்தபொழுது இருபதுபேர் கைதுசெய்யப்பட்டனர்.

வீட்டுப் பாரபட்சத்துக்கெதிராக வெள்ளையர்கள் வாழும் பகுதியில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் மூன்றுவெவ்வேறு பிரிவுகளாக டாக்டர் மார்ட்டின் லூதர் கிங்கின் தலைமையில் சென்றனர்.

(பி. டி. ஸி)

## ரொடீஷியா பற்றி மலேஷியா பிரதமர்

கோலாலம்பூர், ஆக. 24

லண்டனில் நடைபெறவிருக்கும் சாம்ராஜ்ய நாடுகள் மகாநாட்டில், ரொடீஷியாவுக்கு எதிராகப் பலாத்காரம் பிரயோகிப்பதைத் தான் எதிர்ப்பாரென்ற அறிகுறியை இங்கு மலேஷியாப் பிரதமர் துங்கு அப்துல்ரஹ்மான் வெளியிட்டார்.

ரொடீஷியாவில் உள்ள அயன் ஸ்மித்தின் அரசாங்கத்தைக் கவிழ்க்க என்ன நடவடிக்கைகளை மலேஷியாமேற்கொள்ளும் என்று பிரதமர் துங்கு, பாராளுமன்றத்தில் கேட்கப்பட்ட போது, நல்லதோ கெட்டதோ எந்த அரசாங்கத்தையும் கவிழ்க்க மலேஷியாவுக்குச் சக்தி இல்லையென்றும். அது சிறிய நாடென்றும். சமாதானத்தை விரும்புவதால் அப்படிக் கவிழ்க்க விரும்பவுமில்லை என்றும் அவர் பதிலளித்தார்.

ரொடீஷிய பிரச்னைக்கு ஆலோசனை கூறப்படும் எந்தத் தீர்வுக்கும் மலேஷியா ஆதரவு அளிக்குமென்பதைச் சுட்டிக் காட்டிய பிரதமர், பலாத்காரம் மட்டும் தவிர்க்கப்பட வேண்டுமென்று தெரிவித்தார்.

(பி. டி. ஸி.)

## பரிசளிப்பு விழா

உடுப்பிட்டி, புதன்

புலோலி மேற்கு சைவத் தமிழ்ப் பெண் பாடசாலை பெற்றார் தினவிழாவும் பரிசளிப்பு விழாவும் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது. வடமராட்சி காரியாதிகாரி திரு. ஏ. ஸி. விசுவநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி விசுவநாதன் பரிசில்கள் வழங்கினார்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மக்களிடம் நாம் உண்மையான அன்புடன் இருப்பின் அதுவே கடவுளிடம் அன்புகொண்டதாகும். ஏனெனில் கடவுள் மக்கள் உள்ளங்களில் வசிக்கின்றாரல்லவா, அவ்வித அன்பினால் நாம் நமது கீழ்த்தரமான ஆசாபாசங்கள் நீங்கி, இன்பமாக வாழமுடியும்.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box 49 JAFFNA.
Telegrams : EELANADU Jaffna: Telephone : 339

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு ஆவணி மீ 8 (24-8-66)


## யாழ்ப்பாணத்தில் கலைவளர்ச்சி

யாழ்ப்பாணத்திலே பிரதேச கலா மன்றத்தின் ஆதரவில் நாளை ஆரம்பமாகும் கலை விழா, இங்கு பல கலைகளை வளர்க்கவும் கலைஞர்களுக்கு உற்சாகமூட்டி அவர்களை ஆதரிக்கவும் உதவுமென்று நம்புகின்றோம். மாவட்ட அதிபர் வேர்ணன் அபயசேகராவின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மதிய குழுவிலே மக்களின் பிரதிநிதிகளும், அரசாங்க அதிகாரிகளும் அங்கம் வகிக்கின்றனர். இவ்விரு பகுதியினரும் ஒத்துழைப்பதின் மூலம் இக்கலைவிழா பூரணவெற்றியடைந்து, கலை வளர்ச்சிக்கான நிரந்தரமான நன்மைகளைச் செய்யவேண்டும்.

சுமார் இருபது வருடங்களுக்குமுன் இருந்த நிலையுடன் ஒப்பிடுகையில் இப்போது இசை, நாடகம் முதலிய கலைத்துறைகளில் யாழ்ப்பாணம் பெரிதும் முன்னேறியுள்ளதென்பதில் சந்தேகமில்லை. ஈழத்து இசைக் கலைஞர்கள் பலர் தமிழகம் சென்று பேரும் புகழுமடைந்துள்ளனர். அரசாங்க ஆதரவும் உற்சாகமும் இல்லாமலிருந்தும் பல கலைஞர்கள் தங்கள் சுய முயற்சியினாலேயே, முன்னேற்றமடைந்து தங்களுக்கு மட்டுமன்றி நம்நாட்டுக்கே பெருமை தேடித்தந்துள்ளனர். சுதந்தர இந்தியாவிலே கலை வளர்ச்சிக்காக அரசாங்கம் அளிக்கும் உதவிகளுடனும் ஆதரவுடனும் ஒப்பிடுகையில் இங்கு அரசாங்கம் பெருமைப்பட ஒன்றுமில்லை. அதிலும் தமிழ்இசை, நாடகம், நடனம் முதலிய கலைகளை வளர்க்க இங்கு அரசாங்கம் அளிக்கும் உதவி மிக மிக அற்பமாகும்.

கலைகளும் கலைஞர்களும் தான், மக்களின் சமூக வாழ்வைச் சிறப்பிக்கவும் அவர்களுக்கு இன்பமூட்டவும் உதவுகின்றார்கள். நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா குறிப்பிட்டுள்ளது போல, ஒரு தேச நாகரிகத்துக்கு, கலை வளர்ச்சிதான் முக்கிய அளவுகோலாகும். ஆகவே கலைஞர்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் மேலானபணி செய்பவர்களாகின்றனர். இன்றுமற்றவர்களெல்லாரையும் விட சினிமாக் கலைஞர்களுக்கு அதிக செல்வாக்கும் மக்களிடையே ஆதரவும் இருப்பதற்குக் காரணம், அவர்கள் மக்களுக்கு இன்பமூட்டி, அவர்களுக்கு வாழ்க்கையில் மகிழ்ச்சி அளிப்பதுதான். ஆகவே கலைகளையும், கலைஞர்களையும் வளர்க்க எவ்வளவுக்கெவ்வளவு அரசாங்கமும் பொதுமக்களும் முயற்சி எடுக்கின்றனரோ அவ்வளவும் வரவேற்கத்தக்கதாகும்.

தமிழ் மன்னர்கள் ஆண்ட காலத்தில் பல கலைகளும் செழித்தோங்கின. கலைஞர்களுக்கு கனகாபிஷேகம் செய்து மானியங்கள் விடப்பட்டன. ஆனால் நாடு அடிமைப்பட்டதிலிருந்து, நம் கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் ஆதரவில்லாமற்போயிற்று. சமீப வருடங்களில் தான் நம் கலைகள் மெதுவாகவே புத்துயிர்பெற்று வருகின்றன. நம்மக்களிடையே கலைத்திறன் பெரிதும் மறைந்துகிடக்கின்றது. ஆதரிப்பாரில்லாது போனதால் அவர்கள் தங்கள் கலைகளை வளர்ப்பதைவிட்டு வேறு தொழில்களில்ஈடுபட வேண்டியதாயிற்று. நம்கலைகள் மீண்டும் அபிவிருத்தியடையவேண்டுமாயின், சிறப்பாக அரசாங்கத்தின் ஆதரவு அதிகம் தேவை.

உதாரணமாக யாழ்ப்பாணத்திலே இசை, நடனம்முதலியன கற்கவேண்டுமென்ற ஆர்வம் மக்களிடையே அதிகரித்துள்ளதெனினும், இங்கு ஒரு முதல்தரமான இசைக் கல்லூரியை அமைக்க அரசாங்கம் இன்னும்முன் வரவில்லை. கலைஆர்வமுள்ள சில தனிப்பட்டவர்கள்தான் இவ்வித முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். அரசாங்கம் இவ்வித ஸ்தாபனங்களுக்கு அளிக்கும் உதவியோ மிக அற்பம். நடப்பு வருடத்தில் மூவாயிரம் ரூபாய் தான் கலாசார விவகார இலாகாவிலிருந்து இந்த மன்றம் மான்யம்பெற்றுள்ளதாகத் தெரிகிறது. சுமார் 60 சங்கங்களும் நிறுவனங்களும், உதவிக்காக விண்ணப்பித்துள்ளனவாம். இவற்றுக்கெல்லாம் பிரித்து அளிப்பதாயின், வருடத்தில் சராசரி ஒரு ஸ்தாபனத்துக்கு 50 ரூபாய் கிடைக்கக்கூடும்! இதனால் இங்கு எப்படி கலைகள் வளர முடியும்?

கலைகளும் கைப்பணிகளும் பல மக்களின் வாழ்க்கைப் பிரச்னையையு தீர்க்குமாதலால், வேலையில்லாக் கஷ்டம் குறையுமாதலால், இவ்விஷயத்தில் தேசிய அரசாங்கம் தரித்திரபுத்தியைவிட்டு அதிக தாராளமாக மான்யமளிக்க முன்வர வேண்டும். புகழ்பெற்ற கலைஞர்களுக்கு பாரதநாட்டில செய்வதுபோல் விருதுகள் அளித்து உற்சாகமூட்டவேண்டும். கலைஞர்களின் தேவைகளை அறிந்து, அவற்றை தாராள புத்தியுடன் பூர்த்திசெய்ய எல்லா நடவடிக்கைகளையும் எடுக்கவேண்டும். பணமில்லை என்ற பழைய பல்லவி பாடுவதால் பயனில்லை. பாரதநாட்டிலிருந்து சில புகழ்பெற்ற கலைஞர்களை வரவழைத்து கலை நிகழ்ச்சிகளுக்கு அவ்வப்போது ஒழுங்குசெய்தால், ஆயிரக்கணக்கில் அல்ல, லட்சக்கணக்கிலும் பணம் சேர்க்கலாம் இதற்கு இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பை நாடினால் அது சுலபமாகக் கிடைக்குமென நம்புகிறோம். இப்போது யாழ்ப்பாணத்தில் கலை விழா நடத்தும் பிரதேச கலா மன்றத்தினர், இவ்விஷயமாக கூடிய ஊக்கமெடுத்து முயற்சிசெய்தால் பயன் நிச்சயம் கிடைக்கும். கலைகள் வளரவேண்டுமாயின், கலைஞர்களுக்குக்கூடுமான ஆதரவும் உற்சாகமும் அளித்து, கலைவளர்வதற் [illegible] யும் அளிக்கவேண்டுமென்பதை மறக்கப்படாது.

## தமிழ்- சிங்கள நட்புறவுக்கு வித்திட்டது ஜயவர்த்தன குடும்பமே

— எஸ். சிவசுப்பிரமணியம —

இலங்கையினதும், தமிழ் மக்களினதும் இன்றைய அரசியற் சரித்திரத்தில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் வடமாகாண விஜயம் ஓர் முக்கிய சம்பவமாகும். இக்காலத்து தமிழ், இலங்கைத் தலைவர்களுள் மிகவும் மதிப்பு வாய்ந்த தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் தலைமையிலுள்ளதும், தமிழர்களின் சக்திவாய்ந்த அரசியற்கட்சியுமான தமிழரசுக்கட்சியின் அழைப்பின்மீதே திரு. ஜயவர்த்தன இவ் வடமாகாண விஜயத்தை மேற்கொண்டார்.

கட்சியின் மகாநாட்டிலும் பொதுக் கூட்டத்திலும் திரு. ஜயவர்த்தன பங்கு பற்றிப் பேசியது, அவரது விஜயத்தின் அரசியல் முக்கியத்துவத்துக்கு அதிக மதிப்புத்தருகிறது. மதிப்புக்குரிய இச்சிங்களத் தலைவர் வட பகுதியிலுள்ள பல தொகுதிகளுக்கு விஜயம்செய்து அங்குள்ள மக்களின் தேவைகளுடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது வரவேற்கத்தக்கதே

வண. மல்வத்தை மகா நாயக்கதேரோ, பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா ஆகிய மதிப்புவாய்ந்த சிங்களத் தலைவர்களின் வட பகுதி விஜயங்களைத் தொடர்ந்து வந்துள்ள இம் மகிழ்ச்சிகரமான நேரத்தில் திரு. ஜயவர்த்தனவின்தாய் வழியிலும், தந்தை வழியிலும் உள்ள பெருமைசால் குடும்பங்கள், இலங்கையின் சமீபத்தைய அரசியற் சரித்திரத்தில் ஆற்றிய பங்கினை நினைவுகூர்தல் சமயோசிதமாகும்.

### இன ஒற்றுமைக்கு அஸ்திவாரம்

அவரது தந்தை வழியில் மற்றெந்த சிங்களக் குடும்பத்தையும்விட சிங்கள—தமிழ் நட்புறவுக்கும், தேசிய ஒற்றுமைக்கும் அஸ்திவாரம் நாட்டுவதில் திர்க்கமான பங்கினை ஆற்றிய, பிரசித்தி பெற்ற ஜயவர்த்தன குடும்பத்தைச் சார்ந்தவர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன.

இற்றைக்கு ஏறத்தாழ 55 வருடங்களுக்கு முன்தான் ஜயவர்த்தன குடும்பத்தைச் சேர்ந்த சகோதரர்கள், குடும்பத்தின் மூத்த அங்கத்தவரும், இலங்கையின் சிறந்த வழக்கறிஞர்களில் ஒருவருமான திரு. ஹெக்டர் ஜயவர்த்தன, இன்னுமோர் சிறந்த வழக்கறிஞரும், பின்னர் சுப்ரீம் கோர்ட் நீதவானாகப் பதவியேற்றவரும் இன்று எம்மிடையே விஜயம் செய்துள்ள மந்திரியின் தந்தையுமான திரு. ஈ. டபிள்யு. ஜயவர்த்தன, மற்றுமோர் மாமனாரானவரும் சுப்ரீம் கோர்ட் நீதவானாகப் பதவிவகித்தவருமான திரு. ஏ. சென்ற் வி. ஜயவர்த்தன ஆகிய இம் மூவரின் தலைமையில் தகுதிவாய்ந்த ஓர் சிங்களத் தலைவருக்கெதிராக, அப்போது திரு. பொன்னம்பலம் இராமநாதனாகவிருந்த தமிழரின் பெருந்தலைவரான சேர். பொன்னம்பலம் இராமநாதனை ஆதரித்தனர். தேர்தலில் மிகப் பெரியபெரும்பான்மையால் திரு. இராமநாதன் சட்ட சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திரு. இராமநாதனின் இத்தேர்வு அத்தமிழ்த் தலைவரின் தலைமையை ஊர்ஜிதம் செய்ததுடன் அகில இலங்கைத் தலைமைக்குரிய மதிப்பையும் ஸ்தானத்தையும் அதற்கு அளித்தது.

### இராமநாதன் தேர்வு

மற்றெந்தச் செயலையும்விட, இந்த ஒரு செயல் சிங்கள, தமிழ்ச் சமூகங்களை ஏறத்தாழ ஓரே இனமாக்கும்வகையில் இருசமூகங்களுக்குமிடையே மிகுந்த நட்புறவை உருவாக்கியது. தேசிய ஐக்கியத்துக்கும், தேசிய சுதந்திரம் பெறுவதற்கும் இத்தேர்வு அஸ்திவாரமாக அமைந்தது.

பெருமைமிக்க தமிழர் ஒருவரான சேர் பொன்னம்பலம் அருணாசலத்தின் தலைமைக்குச் சவால்விடப்பட்ட நேரத்தில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவின் தந்தையான திரு. ஈ. டபிள்யூ. ஜயவர்த்தன, கொழும்பில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது மண்டபத்தில் எங்கணும் எதிரொலித்த ரீங்காரக்குரலில், சந்ததி சந்ததியாக வரும் முறைப்படியே தலைமைப்பதவி சேர் அருணாசலத்தைச் சார்ந்துள்ளதென்றும், யாருமே அந்த உரிமையைக் கேள்வி கேட்க முடியாதென்றும் கூறினார். அக்கூட்டத்துக்கு இக்கட்டுரை ஆசிரியரும் சென்றிருந்தார்.

கொழும்பில் நடைபெற்ற இன்னுமோர் பொதுக்கூட்டத்தில் பிரசன்னமாயிருக்கும் நல்லவாய்ப்பு இதை எழுதுபவருக்குக் கிடைத்திருந்தது. சன நெருக்கமான அப் பொதுக்கூட்டத்தில் மதிப்புக்குரிய தலைவர் சேர் பொன்னம்பலம் இராமநாதன், திரு. ஈ. டபிள்யூ. ஜயவர்த்தனவின் கழுத்தில் ஒரு மாலையைச்சூட்டியபொழுது சிங்களவர்கள், தமிழர், முஸ்லிம்கள் மற்றும் சமூகத்தவர்கள் அடங்கிய அக்கூட்டத்தினரிடமிருந்து வானைப் பிளக்கும் கரகோஷம் எழுந்தது. தமது வாழ்க்கையிலேயே பெருமைமிக்க நேரமது அன்று குறிப்பிட்ட திரு. ஜயவர்த்தன, சேர் பொன்னம்பலம் இராமநாதனால் மாலை சூட்டப்பட்ட அந்த ஒரு செயல், தனது வாழ்க்கை முழுவதற்கும் பூரணத்துவம் அளிப்பதாகும் என்று கூறினார்.

திரு. ஜயவர்த்தனவின் இன்னுமோர் தந்தைவழி மாமன் காலஞ்சென்ற கேர்ணல் ரி. ஜீ. ஜயவர்த்தன ஆவார். அக்காலத்தில் இராணுவத்தில் இலங்கையர் ஒருவர் வகிக்கக்கூடிய மிக உயர்ந்த பதவியில் இருந்தவர் இவர். அசாதாரணதிறமை வாய்ந்த என்ஜினியராகவிருந்த இவர் பின்னர் சட்டசபைக்கும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### பெருமைமிக்க குடும்பம்

திரு. ஜயவர்த்தன தனது தாய் வழியிலும், சிங்களமக்களிடையே தாராளம், பக்தி, பொதுச்சேவை ஆகியவற்றுக்குப் பெயர் பெற்ற மதிப்புமிக்க குடும்பமொன்றைச் சார்ந்தவராவர். பொதுப்பணிக்காக ஜயவர்த்தன குடும்பத்தினர் ஆற்றிய சேவைகளில் உலகப் பிரசித்தி வாய்ந்த பௌத்த ஆலயத்துக்குத் திரு. ஜயவர்த்தன பாட்டி விட்டுச்சென்ற அன்பளிப்பு அவரது மாமனாரான திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாணத்துக்கு அடுத்தடுத்துப் பல பெரிய மனிதர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். பிரதம மந்திரி வந்தார். பின்னர் கி. வா. ஜ. தம்பதிகள்; இப்போது இந்திய ஹைகமிஷனர் சச்சார் தம்பதிகளும், அரசாங்க அமைச்சர் ஜயவர்த்தன தம்பதிகளும்.

ஹைகமிஷனர் சச்சாரை நீங்கள் நேரில் பார்த்தீர்களோ? இந்தியாவுன் பண்பாட்டையும், காந்தியத்தையும் பிரதிபலிக்க இதுவரைஇப்பேர்ப்பட்ட தூதர் நம் இலங்கைக்கு வந்ததில்லை என்றும், அவரைப் பார்த்தால் நேருஜி ஞாபகம் வருகிறதென்றும் ஓர் அன்பர் கூறுகிறார்.

எவ்வளவு முறை, எவ்வளவு காலம் சிறைசென்றிருக்கிறீர்கள் என்று அவரைக் கேட்டேன். அவர் சிரித்துவிட்டு, உள்ளே செல்வதும் வெளியே வருவதுமாகவே இருந்ததாகச் சொன்னார். வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் பிறந்தவராம் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே மிகவும் அந்நியோன்ய உறவு இருந்து வந்துள்ளதாயும், அண்ணன் தம்பிபோல் பழகி வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

உருத்திரபுரம் காந்தி சேவாசங்கத்தில் அவருக்கும் துணைவியாருக்கும் நாற்காலிகள் போட்டு, மற்றவர்கள் கீழே சமுக்காளத்தில் அமர்ந்திருந்தனராம். ஆனால் ஹைகமிஷனர் சச்சார் தம்பதிகள் நாற்காலிகளில் உட்கார மறுத்து, மற்றவர்களுடன் கீழே அமர்ந்தனராம். எவ்வளவு எளிமை!

பூரா கதர் உடைதான். என்றாலும் எவ்வளவு கச்சிதமாகவும், கம்பீரமாகவுமுள்ளது. பார்த்தாலே யாரும் மரியாதைசெய்யும்படி அவரது முகப்பொலிவும், தோற்றமுள்ளது.

❖ ❖ ❖

அன்பர் தேசையா வீட்டிலே அவருக்கு ஓர் சிற்றுண்டி உபசாரம் அளிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் புகையிலை, ஈழத்துக் கொட்டைப்பாக்கு இவற்றை இந்தியா வாங்கிக்கொள்ள ஏற்பாடுசெய்தால் மிக உதவியாக இருக்குமென்று கோப்பாய் எம். பி. கதிரவேற்பிள்ளை யோசனை கூறினார். அதற்கு ஹைகமிஷனர் சச்சார் அளித்த பதிலில் இதில் கஷ்டமிருக்கத் தேவையில்லை என்றும், இந்தியத் துணிகளுக்குப் பதிலாகப் பண்டமாற்று முறையிலே இவற்றை வாங்கிக்கொள்ளும்படி செய்யலாமென்றும் இதனால் செலாவணிச் சங்கடங்கள் எழாமல் இருக்குமென்றும் தெரிவித்தார். இதைக் கேட்க மிக மகிழ்ச்சியாக இருந்தது.

இரு தேச அரசாங்கங்களும் இதைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினால், யாழ்ப்பாணப் புகையிலையையும், ஈழத்துக் கொட்டைப் பாக்கையும் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பிவைக்க வழிபிறக்கலாம். நாம் இந்தியத்துணிகளை வரவழைக்கலாம். இரு தேசப் பொதுமக்களுக்கும் நன்மையாக இருக்கும். நமது எம். பி மார்கள் இதில் கவனம்செலுத்துவரென்றே நம்புகிறேன்.

❖ ❖ ❖

கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரியிலே பழைய மாணவிகள் சங்கத்தாரின் 5வது வருடாந்த

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கலைப்பணி புரிந்து வரும் யாழ். பிரதேச கலை மன்றம்

## நாளை முதல் ஆரம்பமாகும் கலை விழா

தொன்று தொட்டு மனிதன் வாழ்வில் முக்கிய பங்கினை ஆற்றிவருவது கலை. கலை தமிழன் வாழ்வில் அன்று தொடக்கம் இன்றுவரை இன்றியமையாத இடத்தைப் பெற்றுவந்துள்ளது.

யாழ்ப்பாணமும், யாழ்ப்பாண மக்களும் கலைகளுக்கு முதலிடம் அளித்துவந்துள்ளனர், வருகின்றனர். ஆதலாற்தான் அவர்களால் உலகத்துக்கு ஓர் ஆனந்த குமாரசாமியை அளிக்கமுடிந்தது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கலைகளைப் பரப்பவும், வளர்க்கவும், பேணவும் பணியாற்றிவரும் யாழ்ப்பாண பிரதேச கலைமன்றம் நாளை 26-8-66 வெள்ளிக்கிழமை தொடக்கம் 29-8-66 திங்கட்கிழமை வரை யாழ்ப்பாண மக்களுக்கு அரியதொரு கலை விழாவை அளிக்க முன்வந்துள்ளது. கலைமன்றத்தின் தற்போதைய தலைவராகக் கலையார்வம் மிக்க யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகரா இருக்கிறார்.

இக்கலை விழாவை நாளைக் காலை 9.30 மணிக்கு யாழ். மத்தியகல்லூரியில் கௌரவ நீதியரசர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் திறந்துவைக்கின்றார்.

கலைவிழாவில் இடம்பெறும் தினசரி நிகழ்ச்சிகள் இரண்டு பிரிவுகளாகக் காலையில் யாழ். மத்திய கல்லூரியில் கலைக்காட்சியும், மாலையில் யாழ். திறந்தவெளியரங்கில் கலை நிகழ்ச்சிகளுமாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

காலையில் நடைபெறும் கலைக்காட்சியில், ஓவியம், சிற்பம், கைப்பணி, நிழற்படம், சிப்பிக்கலை, சித்திரப் பிடவைகள், பட்டங்கள், பரம்பரைக் கைப்பணி, ஆபரணங்கள் முதலியனவும், மனையியல் செய்கை முறைகளும் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. இக்கலைக்காட்சி காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெறும்.

கலை நிகழ்ச்சிகள் திறந்த வெளியரங்கில் மாலை 6 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணிவரை நடைபெறும் இசை, நடன, நாடக நிகழ்ச்சிகளை இங்கு தினசரி கண்டு களிக்கலாம். இந்த நிகழ்ச்சிகளில் பிரசித்தி பெற்ற கலைஞர்களும், பிரதேச நாடக மன்றங்களும், கல்லூரிகளும் பங்கு பற்றுகின்றன.

நாளை வெள்ளியன்று திறந்த வெளியரங்கில் நடைபெறும் நிகழ்ச்சிகள் மாலை 6 மணிக்கு ஸ்ரீ என். கே. பத்மநாதன் குழுவினரின் நாதஸ்வர இன்னிசையுடன் ஆரம்பமாகின்றன. 7 மணி தொடக்கம் 7-30 மணி வரை சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும், யாழ்ப்பாணம் ரஸிகரஞ்சன சபாவும் கோஷ்டிகானம் அளிக்கின்றன. 7-30 தொடக்கம் 8-30 வரை திருமதி பகவதி ரங்கராஜன், திருமதி கமலா ஹரிஹரஐயர் இருவரும் பாட்டுக்கச்சேரி நடாத்துவர். 8-30 தொடக்கம் 9-15 வரை பாடசாலைகளின் நடனங்கள் இடம்பெறுகின்றன. 9-15 தொடக்கம் 10 மணிவரை மானிப்பாய் 'கலைக்கோவில்' குழுவினர் அளிக்கும் நடன நிகழ்ச்சி. ஈற்றில் 10 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை அரியாலை நாடகமன்றத்தாரின் 'பாதுகை' நாடகம் இடம்பெறுகிறது.

தொடர்ந்து சனி, ஞாயிறு திங்கட்கிழமைகளில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளை 'ஈழநாடு'ப் பத்திரிகையில் படித்து வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

பெருமளவு பணச்செலவில் தயாரித்தளிக்கப்படும் யாழ். பிரதேச மன்றத்தின் இக்கலை விழாவின் பிரவேசக்கட்டணங்கள், கலை கலைப் படைப்புகளைப் பொதுமக்கள் கண்டு பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்துடன், மிகவும் குறைக்கப்பட்டுள்ளன. தினசரி காலை நடைபெறும் கலைக்காட்சிக்கு 25 சதமும், மாலை நடைபெறும் கலைநிகழ்ச்சிகளுக்கு 25 சதமுமே அறவிடப்படுகின்றன. மேலாக, நான்கு நாட்களும் நடைபெறும் சகல நிகழ்ச்சிகளையும் கண்டு களிக்க மொத்தம் ஒரு ரூபாய்க்கு ஒரு நுழைவுச்சீட்டைப்பெற்றால் போதும். இது பொதுமக்கள் பயன்படுத்தவேண்டிய ஓர் அரிய சந்தர்ப்பமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கலைச்சேவை ஆற்றிவரும் யாழ். பிரதேச கலை மன்றம் பற்றிச் சில வார்த்தைகள். அதுவும், அவை அம்மன்றத்தின் பொதுச் செயலாளரான யாழ்ப்பாண மாவட்ட காரியாதிகாரி திரு. எஸ். சிவஞானத்தின் வாயிலிருந்தே வெளிப்பட்டால் விசேஷமல்லவா? அவர் கூறுகிறார்.

மாவட்டத்தின் கலைகள் சம்பந்தமான குரலாக பிரதேச மன்றம் இயங்குகிறது. எங்கள் பிரதிநிதித்துவத்தையும் அதிகாரபூர்வமான அந்தஸ்தையும் இதுசம்பந்தமாக அரசாங்கம் ஏற்றுள்ளது.

வருங் காலத்திட்டங்கள் சிலவற்றை இங்கு சுட்டுவது பொருத்தமாயிருக்கும் வருங்காலத்தில் ஒரேயிடத்தில் நாடகங்களை மேடையேற்றவும், இசை, நடன நிகழ்ச்சிகளுக்கும் ஒரு நவீன அரங்கு ஒரு ஓவியகூடம், ஒரு நூல் நிலையம், ஒரு காரியாலயம் ஆகியவற்றை நிறுவுவது பிரதேச கலை மன்றத்தின் நோக்கமாயிருத்தல்வேண்டும். அரசாங்கத்தின் தாராள ஆதரவுடனும், மாவட்டத்தில் நுண்கலைகளை வளர்க்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளோரின் ஆர்வம் மிக்க ஆதரவுடனும் இந்நோக்கம் வெறும் கனவாயிருக்காது என்று நிச்சயமாக நம்புகிறேன்.''

வெறும் கனவாயிருக்காது அது நனவாக வேண்டுமெனில் பொதுமக்கள் ஆதரவு இக்கலைமன்றத்தின் நிகழ்ச்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் தேவை. பொதுமக்கள் அந்த ஆதரவை அளித்து, யாழ்ப்பாண மாவட்டத்தின் கலைகள் வளர்ந்தோங்க உதவி செய்வரென நம்புகிறோம்.

## காத்தான் குடியில் புதிய மார்க்கெட்

காத்தான்குடி, புதன்

காத்தான்குடி 3-ம் குறிச்சியில் ரூ. 35,000 செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள மார்க்கெட், மெத்தப்பள்ளி நிர்வாகக்குழுவின் தலைவர் எம். ஏ. அதம்லெப்பை ஹாஜியாரால் திறந்து வைக்கப்பட்டது. ஊர் மக்கள் திரளாகவந்து புதிய மார்க்கெட்டில் பல பொருட்களை வாங்கிச் சென்றனர்.

## வர்த்தகர் சங்க நிர்வாகிகள்

உடுப்பிட்டி' புதன்

நெல்லியடி வர்த்தகர் சங்க புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு. க. ஞானசுப்பிரமணியம், உப தலைவர்: திரு. வ. சிவசோதி, இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் கே குலசேகரம்பிள்ளை, செ. சுப்பிரமணியம், தனாதிகாரி: திரு. க. சிதம்பரப்பிள்ளை. நால்வர் கொண்ட நிர்வாகக்குழு வொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

# யாழ்ப்பாணம் பிரதேச கலை மன்றம்

அளிக்கும்

# கலை விழா

**1966 ஆவணி 26 தொடக்கம் 29 வரை**

*திறப்புவிழா:* 26-8-66 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில்

**கௌரவ நீதியரசர் பொ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள்**

கலை விழாவைத் திறந்து வைப்பார்கள்

அன்று மாலை திறந்த வெளியரங்கில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கும் அவர்களே தலைமை தாங்குவார்கள்

*பரிசளிப்பு விழா:* 29-8-66 திங்கட்கிழமை காலை விழாவில்

**ஸ்தலஸ்தாபன மந்திரி கௌரவ மு. திருச்செல்வம் அவர்கள்**

பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்

**திறந்த வெளியரங்கில் இரவு 8-30 மணிக்கு நடைபெறும் பரிசளிப்பு விழாவில்**

**திருமதி மு. திருச்செல்வம் அவர்கள் பரிசில்களை வழங்குவார்கள்**

*தினசரி நிகழ்ச்சிகள்:* *26-8-66——29-8-66*

**காலை 10 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை**

**கலைக்காட்சி:** யாழ். மத்திய கல்லூரி

ஓவியம், சிற்பம், கைப்பணி, நிழற்படம், சிப்பிக்கலை, சித்திரப்பிடவைகள், பட்டங்கள், பரம்பரைக் கைப்பணி, ஆபரணங்கள் முதலியனவும் மனையியல் செய்கை முறைகளும்

**மாலை 6 மணி தொடக்கம் நள்ளிரவு 12 மணி வரை**

**கலை நிகழ்ச்சிகள்:** யாழ். திறந்த வெளியரங்கு

இசை நிகழ்ச்சிகள், நடன நிகழ்ச்சிகள், நாடகங்கள்

**கலைக்காட்சி:** யாழ். மத்திய கல்லூரி — பிரவேசக்கட்டணம்: சதம் 25

**கலை நிகழ்ச்சிகள்:** யாழ். திறந்த வெளியரங்கு — பிரவேசக்கட்டணம்: சதம் 25

குறிப்பு: ஒரு ரூபாய் நுழைவுச் சீட்டு[illegible] கலைநிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் வயல்

## சிரிப்பில்தான் எத்தனை வகை!

ஒருவர் சிரிக்கிறார் என்றால் அவர் மகிழ்ச்சியாய் இருக்கிறார் என்று அர்த்தமா? இந்தச்சிரிப்பில்தான் எத்தனை வகையிருக்கிறது அசட்டுச் சிரிப்பு, ஆனந்தச் சிரிப்பு, அறிமுகச் சிரிப்பு. ஆணவச் சிரிப்பு, ஏளனச் சிரிப்பு, கோபச் சிரிப்பு, இளநகை, புன்னகை, குறுநகை, புன்முறுவல் என்று எழுதிக் கொண்டேபோகலாம்.

சிரிக்கின்ற சந்தர்ப்பத்தை நோக்கி சிரிப்பிற்கு பெயரிடலாம்

### அப்ப வாருங்கோ!

அறிமுகமான ஒருவரை வீதியில் கண்டால் உடனே ஒரு சிரிப்பு. எத்தனை மணிக்கணக்காக கதைக்கவேண்டியதை ஒரு சில நிமிடங்களில் சாதித்துவிடுகிறது இந்த அறிமுகச்சிரிப்பு அப்ப வாருங்கோ என்று தலையை ஆட்டி தெருவில் சிரிப்பது இந்த வகையைச் சேர்ந்தது

பள்ளிக்கூட மாணவர்கள் ஒன்றுசேர்ந்து கும்மாளமடித்து தெருவில் போகிறவர்களைப் பரிகாசிப்பதற்கு இழுத்து இழுத்து சிரிப்பது ஒருவகை இதைக் குதிரைச் சிரிப்பு என்று கூறுவார்கள் ஒருவரைப் பார்த்து இந்த இழுப்புச் சிரிப்பைச் சிரித்தால் நிச்சயம் அவருக்கு உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை கோபம் பொத்துக்கொண்டு வருமென்பதில் ஐயமில்லை.

### அசட்டுச்சிரிப்பு!

அறிமுகமில்லாத விருந்தாளி வீட்டிற்கு வந்து கதையை அளந்து கொண்டிருப்பார். கதையின் இடையிடையே அர்த்தமில்லாத ஜோக்குகளை அள்ளிவீசிக் கொண்டிருப்பார். சிரிக்காவிட்டால் அவர் மனம் புண்பட்டுவிடும் என்பதற்காக அவர் கதைகளுக்கிடையில் 'ஹா ஹா' என்று சும்மா சிரித்துவைப்பது, இது ஒரு அசட்டுச்சிரிப்பு ஒருவருடன் கதையை இடைநடுவில் நிறுத்தவேணுமெனில் தேவையில்லாத இடத்தில் ஒரு அசட்டுச்சிரிப்பு போதுமானதாகும்.

### இன்னொருவகை

வில்லன் சிரிப்பும் சிரிப்புகளில் ஒருவகை, 'ஹா ஹா ஹா...' என்று தொடர்ந்து சில நிமிடங்களுக்கு நிறுத்தாமல் சிரிப்பது சினிமாவில்பார்த்துவிட்டு சில வாலிபர்களும் இப்படிச் சிரிப்பதுண்டு.

வகுப்பில் ஆசிரியர் ஒரு மாணவியை ஏதாவதுகேட்டு மாணவி, விடைதெரியாமல் தடுமாறினால், பின் வாங்குகளில் இருக்கும் மாணவர்கள் 'ஹீ ஹீ ஹீ' என்று ஒரு ஏளனச்சிரிப்பு. பாவம் மாணவி அழாக்குறையாக உட்காரவேண்டியதுதான்!

இதை ஆசிரியர் ஏதாவது, கண்டித்துவிட்டால் அவர் பாடும் தொல்லைதான். இடைவேளைநேரம் ஆசிரியர் வகுப்பறை வழியாய் போனால் கூய் கூய்ய்ய் என்று ஒலச்சிரிப்பு. ஆசிரியர் ஆத்திரப்படாமல் என்னசெய்வார்?

சந்தோஷத்தின் எல்லையில் கண்ணீர்வருவதுபோல் துக்கத்தின் எல்லையிலும் சிரிப்பு வருகின்றது. தன்மகன் சான்றோன் எனக்கேட்டதாயின் மகிழ்ச்சியில் கண்களால் ஆனந்தக் கண்ணீர் சொரிகின்றது. அதேபோல் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதியும் தனது துக்கத்தின் எல்லையில் ஒரு நீண்ட பெருமூச்சுடன் சிரிக்கிறான்.

### பெண்ணின் சிரிப்பு

அர்த்தமில்லாமல் சிரிப்பதில் பெண்கள் கைதேர்ந்தவர்கள் காலையில் பொழுது புலர்வதைப்பார்த்தே அரை மணிநேரம் சிரித்துக்கொண்டிருப்பார்களாம். இவர்களுக்குத்தான் இளநகை, புன்னகை. குறுநகை, புன்முறுவல், எல்லாம தெரியும்! சிரித்துச் சிரித்து சிறையில் இடக்கூடிய தன்மை பெண்களிடம் தானே இருக்கின்றது.

சிரியுங்கள், சிரியுங்கள், சிரித்துக்கொண்டே இருங்கள். சிரித்தால் கொழுக்கலாம் என்று ஒரு பழமொழி கூட இருக்கின்றது.

-புலோலி கோபாலகிருஷ்ணன்

# பிறவி எடுப்பதற்கு கருமவினைதான் காரணமா?

— விஜயா சங்கரநாராயணன் —

மனிதன் முன்பு இயற்றிய கருமத்தையொட்டி சிலவினைவுகள் மறுபிறவியில் ஏற்படுவது உண்மையே. ஆனால் பிறவியே கருமத்தால் ஏற்படுகிறது என்பது சரியல்ல. அவ்வாருயின் முதன் முதல் ஜீவன் பிறவி எடுத்தபோது என்ன கருமவினை இருந்தது? கருமவினை என்பது ஜீவனின் மலர்ச்சிக்கான சாதனமே என்று மகான் அரவிந்தரின் கருத்துக்களை கூறுகிறார் ஆசிரியை.

ஒரு முக்கிய விஷயம். ஜீவனுக்கும் விசுத்த ஆத்மாவுக்கும் வேறுபாடு உண்டு. ஆத்மா என்பது ஜீவனுக்கு ஆதாரம். அது அப்படி இருந்தும் கூட எதிலும் கலந்து கொள்ளாமல் தனித்துநிற்கிறது. இறப்பு—பிறப்பு இவற்றின் ஊடே அது புகுவது இல்லை. ஆனால் ஜீவன் என்பது பரிணமத்திற்காக ஜனன மரணத்திற்கு உள்ளாகிறது. தான் அழிவற்றதாயினும் பௌதிக இயல்பில் கலந்துகொண்டு சாவிற்கும் பிறப்பிற்கும் நடுவே புகுந்து வெளிபேறுகிறது.

### கருமவினை

கருமப் பயனால் பிறவிஏற்படுகிறது என்பது சரியல்ல. அவ்வாருனால் முதன் முதல் ஜீவன் பிறவியெடுத்த சமயம் என்ன கருமம்இருந்தது? கரும - வினை என்பதும் ஜீவனின் மறுமலர்ச்சிக்கான சாதனமேயாகும். தான் முன்பு இயற்றிய கருமத்தை ஒட்டிச் சில விளைவுகள் மறு பிறவியில் ஏற்படுவது உண்மையே. ஆனால் பிறவியே கருமத்தால் ஏற்படுகிறது என்பது சரியல்ல ஒரு ஜீவன் தாவரத்திலிருந்து படிப்படியாக முன்னேறி மனிதப் பிறவியை அடைகிறது. மனிதநிலையில் மனம், பிராணமயம் போன்ற சாதனங்களை மலருவித்து அவற்றின்மூலம் தனது திவ்விய குணத்தை வெளிக்கொணர முயலுகிறது. மானிடநிலை பூரண பக்குவ மடையாதவரை மறைமுகமாகவே இவை யாவும் நடைபெறும். ஆனால் ஒருநாள்வரும்: அப்போது திரை விலகிவிடும். ஜீவன் தனது சாதனமான ஆற்றல்களையெல்லாம் தெய்வத்தின் நிறைவுக்காக நேர்முகமாகத் தெய்வத்தை நோக்கித் திரும்பிவிடும். அத்யாத்ம வாழ்வின் ஆரம்பம் இதுவே. இச்சமயம் ஜீவன் தன்னிச்சையாக உயர்ந்த எழுச்சிகளுக்குத் தயாராக முடியும். அது சாதாரண மனோ நிலையிலிருந்து ஓர் அத்யாத்ம உணர்வை அடையும். அதன்பின் அத்யாத்ம நிலையிலிருந்து விஞ்ஞான நிலையை எட்டிவிடும். அதுவரை பௌதிக சம்பந்தமான இந்த ஜனன மரணம் இருந்துகொண்டுதான் இருக்கும் என்கிறார் ஸ்ரீ அரவிந்தர். அந்த மேல் நிலையை அடைந்துவிட்ட ஜீவன் பௌதிக சிருஷ்டியை விட்டுவிடவே செய்யும். ஆனால் வேறு ஓர் உயர்தரமான சிருஷ்டி தோன்றும் என்கிறார். அது இப்போதைய து போன்ற அஞ்ஞான சிருஷ்டியாயிராமல் ஞானமயமானதாய் இருக்குமாம்.

(7-ம் பக்கம் பார்க்க)

### உலகம்

"உலகம் நாய்வாலைப் போலக் கோணலாயிருக்கிறது. பன்னூறு ஆண்டுகளாகப் பலரும் அதனைத் திருத்த முயலுகிறார்கள். அது மீட்டும் மீட்டும் சுருண்டு போகிறது. வேறு எப்படியாகிறது?"

—சுவாமி விவேகானந்தர்.


# கல்யாணத்தரகர் கருவேலமரம்!

அது ஒரு கருவேல மரம். அந்த மரத்துக்கு உலகத்தின் பல பாகங்களிலிருந்தும்கடிதங்கள் கட்டுக்கட்டாக வந்து குவிகின்றன. என்ன கடிதங்கள் என்று நினைக்கிறீர்கள், காதல்கடிதங்கள்தான்!

ஆயிரக்கணக்கான வாலிபர்கள் இம்மரத்துக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதற்குச் சமமாக இளம் பெண்களும் எழுதியிருக்கிறார்கள். ஒருவகையில்பார்க்கப்போனால் இந்தமரம் 'டாபர்மாமா' வேலை செய்கிறது. அதாவது தரகர் வேலை. எந்த ஆடவருக்கு எந்த ஆரணங்கு பொருத்தம், எந்த பெண்ணுக்கு எந்த இளைஞன் உகந்தவன் என்று கண்டுபிடிப்பதற்கு இந்த மரம் உதவுகின்றது.

இந்த 'மாமா' வேலை செய்யும் கருவேலமரம் ஜெர்மனி நாட்டில் இருக்கின்றது. இந்த மரத்துக்கு விலாசமிட்டுவரும் கடிதங்களைத் தபால்காரர் அம்மரத்திலிருக்கும் ஒரு பொந்தில் திணித்துவிட்டுச் செல்கிறார். அந்தப் பொந்தில் இருக்கும் கடிதங்களைப் பிரித்துப் பார்த்துத் தமக்கு வேண்டிய பெண்ணை அல்லது ஆணை 'செலக்ட்' பண்ணிக் கொள்கிறார்கள். பின் கடிதங்கள் தொடர்கின்றன கடைசியில் திருமணம் தான். இப்படி இந்த 'மாமா' மரத்தின் உதவியால் திருமணம் செய்து கொண்டவர்களின் எண்ணிக்கையும் ஏராளம்!

இந்தத் தகவல்களை எல்லாம் அந்த மரத்துக்குத் தினசரி கடிதம் விநியோகிக்கும் பிரீங் என்ற தபால்காரர் வெளியிட்டிருக்கின்றார். இவருக்கு இப்போது 38 வயது. பாவம் அவர் இன்னமும் திருமணம் செய்துகொள்ளாமல் இருக்கின்றார்.




இந்த நேர்மையான புதிய பி பி பி 66 திறமையைத் தேடும் மக்களுக்காகவே தயாரிக்கப்பட்டது. தானே மை நிரப்பும் அதன்விசேஷ கருவியை நீங்கள் விரும்புவீர்கள்!............ அதன் சுலபமாக எழுதும் தன்மையால், மணித்தியாலக்கணக்கில் எழுதினாலும் மணித்தியாலங்கள் நிமிடங்களாய் மாறிவிடும்!...........பேனாவிலிருந்து மை ஒழுகாமலிருப்பது உங்களின் விருப்பத்திற்குரியதாகும்...........அதன் நெடுத்த பார்வைக்கழகான தோற்றம் உங்கள் கண்களைக் கவரும்!...........உங்கள் கையெழுத்து திருந்தும்!........உண்மையாக பி பி பி 66 பேனாவின் சகல வாய்மைகளையும் நீங்கள் விரும்புவீர்கள்!

## பி.பி.பி. 66

ஜப்பான் பிளட்டினம் கம்பெனியின் ஒரு தயாரிப்பு



பி பி பி 66
பேனாவானது ஆண் பெண் யாவர்க்கும் உகந்தது.

சகலபொருட்கடைகளிலும் கிடைக்கும் பி. பி. பி. 66 பேனாவை இன்றே கேட்டுப் பாருங்கள்.

ஏக விற்பனையாளர்:
ஜேந்திரம்ஸ் லிமிட்டெட், மகாராஜா பில்டிங். பாங்ஷால் வீதி, கொழும்பு-11,
டெலிபோன்: 3603

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொக்கப்பணம் ரூ. 5,000 சாமான்கள் சாம்பல்!

## வீட்டுச் சொந்தக்காரர் ஆஸ்பத்திரியில்

பருத்தித்துறை, புதன்
தம்பசெட்டியில் வி. செல்லையா என்பவருக்குச் சொந்தமான வீடு தீப்பிடித்ததுடன் மட்டுமல்லாது அவரும் எரிகாயங்களுக்குள்ளாகிப் புலோலி அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

இவர் வீட்டிலுள்ள தனது சிறு குழந்தைகளையும், பொருட்களையும் தீவிபத்திலிருந்து காப்பாற்றிக் கொள்ளமுயற்சித்தபோதே எரிகாயத்துக்கு உள்ளானார் வீட்டிலிருந்த பொருட்கள் றொக்கப்பணம் ரூ. 5000 உடுதுணிகள் போன்ற சமான்களெல்லாம் எரிந்து சாம்பலாகிவிட்டதாக இது சம்பந்தமாக நடைபெற்ற விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

இத்தீவிபத்து சம்பந்தமாகப் பருத்தித்துறை பொலிசார் தீவிரபுலன்விசாரணையில் ஈடுபட்டிருக்கின்றனர்.

## தலைவர்களை மாலை இணைத்தது!

மாவிட்டபுரம், புதன்
ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவையும் தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தையும ஒன்ருகச் சேர்த்து மலர்மாலைசூட்டப்பட்டது.

காங்கேசன்துறைக் கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தன பேசிக் கொண்டிருக்கையில் ஒருவர் ஜே. ஆரையும், எஸ். ஜே. வி. யையும் சேர்க்கும் வகையில் இருவர் கழுத்திலும் ஒரேமாலையைச் சூட்டினுர். திரு. ஜே. ஆர். தமது கழுத்திலிருந்து மாலையை எடுத்துசெல்வநாயகத்துக்கு அணிவித்தார்.

## பிறவி எடுப்பதற்கு...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

பரமாத்மாவின் இந்தநோக்கம் நிறைவேறுவதற்காக இயற்கையன்னை இந்தப் பரிணும காரியத்தை நடத்துகிருள். ஜீவன்களும் இதற்கு உட்பட்டு செயல் புரிகின்றன.

### உடையைக் கழற்றுதல்

இவ்வாறு ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது இறப்பு—பிறப்பு என்பது உடையைக் கழற்றுவது போன்ற மிகச் சாதாரணமான விஷயமாகவே தோன்றும். ஜீவன் பலவித அனுபவக்கல்வியைப் பெறுவதற்கான கல்லூரியே இந்தப் பௌதிக உலகம். இந்தப் பௌதிகத்தில் தெய்வஉணர்வைக்கொணர வேண்டும். மனித சிஷ்டிக்கு அடுத்த பரிணுமமான வேருெரு மகோன்னதமான சிருஷ்டி தோன்றுவதற்காகவே இவ்வளவும் நடைபெறுகிறது. ஸ்ரீ அரவிந்த மஹானின் யோகமும் பரமாத்மாவின் நோக்கத்தைத் துரிதமாகச் செயல்படுத்துவதேயாகும். எவ்வளவுக்கெவ்வளவு நாம் இதைஉணர்ந்து தெய்வீகப் பாதைக்கு திரும்புவோமோ அவ்வளவுக்கவ்வளவு விரைவாக நாமும் பரமாத்மாவின் நோக்கத்தைத் துரிதமாக ஈடேற்றுவோம்.

—ராமகிருஷ்ணவிஜயம்

## இராஜவரோதயம் ஞாபகார்த்த விழா

உடுப்பிட்டி, புதன்
தமிழரசுக்கட்சியை சேர்ந்தவரான காலஞ்சென்ற திருக்கோணமலை எம். பி. யுமான திரு. என். ஆர். இராஜவரோதயத்தின் 3வது ஞாபகார்த்த விழவைப் பருத்தித்துறைத் தமிழரசு வாலிப முன்னணியினர் கொண்டாட இருக்கின்றனர்.

இம்மாதம் 27ந் தேதி பருத்தித்துறையில் நடைபெறவிருக்கும் இந்த ஞாபகார்த்த விழாவில் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினம், உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

## விவசாய இலாகாவின் திட்டம்

கனகராயன்குளம், புதன்
வவனிக்குளத்தின் வலதுகரை, இடதுகரை, மத்திய பகுதி ஆகிய நான்கு பகுதிகளின் பிரதான வாய்க்கால் வழியாகப் போகும் தண்ணீரை வீணுக விரையமாக்காமல் தண்ணீர் இறைக்கும் இயந்திரம்கொண்டு உபபயிர்களான மிளகாய், கடலை போன்றவைகளைப் பயிரிட விவசாயிகளை விவசாய இலாகா ஊக்கமளிக்கத்திட்டமிட்டுள்ளது. இந்த உபபயிர்த்திட்டத்தை விவசாய உதவி அதிகாரி ச. கனகரெத்தினமும், வவனிக்குளப் பிரதான பொறியியலாளர் எம். கந்தஞானியும் மாவட்ட விவசாய உத்தியோகத்தர் கே. என். ஜெயசிலனும் பார்வையிட்டனர்.

## தாய்லாந்துக்கு ஐஸனேவர்

பாங்கொக், ஆக. 24
அமெரிக்காவின் முன்னுள் ஜனதிபதிஐஸனேவர் ஜனதிபதி ஜோன்சன் சார்பில் மேற்கொள்ளும் ஓர் ஆசிய சுற்றுப் பிரயாணத்தின்போது, அடுத்தமாதம் தாய்லாந்துக்கு விஜயம் செய்வார் என்றுவிஷயம்தெரிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தாய்லாந்துக்கு ஐசனேவரின் முதல் விஜயமாகும். (பி. டி. ஸி.)


கோவில் தேவைகளுக்கும் விவாகம் முதலிய
விசேஷ வைபவங்களுக்கும் உபயோகமான

**அபிஷேக சந்தனம்**

கோவில் அபிஷேக திரவியங்கள்,
வாசனை மிக்க பன்னீர்,
பரிமளம் நிறைந்த சந்தனவில்லைகள்

**விளைவு தூடம்**

கிடைக்குமிடம்:

**சுந்தரம் பிறதர்ஸ்**

( மருந்துச்சரக்கு வியாபாரம் )

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## தெய்வாதீனமாக உயிர் தப்பினுர்

யாழ்ப்பாணம், வியா.
யாழ். மாநகரசபையின் மின்சாரப்பகுதி ஊழியரான அரியாலையைச் சேர்ந்தபத்மசுந்தரம் என்னுடி 21 வயது வாலிபர் நல்லூர்க்கந்தன் கோவில் வீதியில் மின்சாரக்கம்பத்தில் ஏறி நின்று வேலை செய்யும்போது மின்சாரம் தாக்கி கீழே விழுந்து தெய்வாதீனமாக உயிர் தப்பினுர். அக்கம்பத்தின் உச்சியில் இருந்து அபாயகரமாக விழுந்து மூர்ச்சையான அவரை ஏனைய ஊழியர்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றனர். ஆஸ்பத்திரியில் அவர் சுயநினைவு பெற்ருர்.

## சாரணர் வைபவம்

உடுப்பிட்டி, புதன்
யாழ். மாவட்ட சாரணர் சின்னம் சூட்டு வைபவம் இம்மாதம் 29ந் தேதி யாழ் அரசாங்க செயலகத்தில் சாரணர் கமிஷனர் திரு. இராஜநாயகம் தலைமையில் நடைபெறவிருக்கிறது. 20 சாரணர்கள் இவ்விழாவில் சின்னம் பெறவிருக்கிருர்கள்.

## கூட்டுறவுச் சங்க சமாஜக் கூட்டம்

சுழிபுரம், புதன்
வலி. மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கச் சமாஜ வருடாந்தப் பொதுக்கூட்டம் சமாசத் தலைவர் திரு. க. கெங்காதரம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. நிர்வாகசபை காலியான இடங்களுக்கு ஒருவரைத் தவிர மீண்டும் பழைய அங்கத்தவர்களே தெரிவுசெய்யப்பட்டனர். புதிதாகத் தெரிவுசெய்யப்பட்டவர் மானிப்பாய் கிராமசபைத் தலைவர் திரு. சி. மார்க்கண்டு.

## உள்ளூர் தந்தி பேச 15 சதம்

கொழும்பு, புதன்
உள்ளூர்களில் டெலிபோன் பேசுவதற்கு இனிமேல் 15 சதம் கொடுக்க வேண்டியிருக்கும். இதுவரை இந்தக்கட்டணம் 10 சதமாகஇருந்துவந்தது. பொது மராமத்து தந்திதொடர்பு அமைச்சுவெளியிட்டிருக்கும் ஒரு கஸட் அறிவித்தலில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வானெலி கொழும்பு

25-8-66 வியாழன்

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீற்றர் & 61 மீற்றர்
காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீட்டர் & 49 மீட்டர்
பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 இசை மெட்டு.

இரவு 6-15 இராமசஞ்சிகை, 6-45 தமிழோடிசை பாடல், 7-00 பேச்சு, 7-45 நாடகம், 8-00 முஸ்லீம்நிகழ்ச்சி, 9-15 ... இசை, 9-30 நிலைய ஒலிப்பதிவுகள்

# கொழும்பு கோஷ்டியுடன் இன்று மோதும் யாழ். ஹாக்கி கோஷ்டி!

## கொழும்பில் நான்கு போட்டிகளில் பங்குபற்றும்

யாழ்ப்பாணம், வியா.
வட குதியிலுள்ள பெரிய கல்லூரிகளிலிருந்து பிரபல்யமான விளையாட்டுக்கழகங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட யாழ்ப்பாண ஹாக்கிக் கோஷ்டி இன்று கொழும்பிலுள்ள ராணுவத்தினர்மைதானத்தில் கொழும்பு தேசிய சேவையாளர் ஹாக்கிக்கோஷ்டியுடன் மோதிக் கொள்கிறது.

அகில இலங்கை ஹாக்கி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவில் கொழும்பில்நடைபெறவிருக்கும் ஹாக்கிப் போட்டிகளில் இது முதல் போட்டியாகும்.

இங்கு யாழ், தெர்வுக்கோஷ்டி மற்றும் ஊவாதெரிவுக்கோஷ்டி, கண்டிதெரிவுக்கோஷ்டி, அரசாங்கஊழியர் தெரிவுக் கோஷ்டி ஆகிய கோஷ்டிகள் உட்பட நான்கு கோஷ்டிகளுடன் மோதிக் கொள்ளும்.

யாழ். தெரிவுக் கோஷ்டியில் பின்வரும் வீரர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கிருர்கள்.

### யாழ். வீரர்கள்

கே. பூபாலசிங்கம், என். சோமசுந்தரம், எம். பாலசுப்பிரமணியம்' திரு. தங்கராசா, எஸ். காந்தன், எம். பத்மநாதன், திரு. இரத்தினசபாபதி, வி. ரி. மகாலிங்கம், திரு. சற்குணநாதன், திரு. அன்சா, திரு. நல்லநாதன், திரு. ஜெயசிங்கி.

## கி. ஆ. பெ. வரவில்லை

மாவிட்டபுரம், புதன்
திருச்சியிலிருந்து இன்று யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்பட்ட முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் இன்று வரவில்லை.

விமான நிலையத்தில் அவரை வரவேற்கச் சென்றிருந்த பலர் ஏமாற்றத்துடன் திரும்பினுர்கள்.

## "நமக்குள் சச்சரவு வேண்டாம்"

மாவிட்டபுரம், புதன்
நமக்குள் நாம் மோதிக்கொண்டு வீணேகாலத்தைக் கழிப்பதை விடுத்து சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து பரஸ்பரம் ஒத்துழைத்துசுபீட்சத்துக்கு வழிகாணவேண்டும்'' என்று உதவி ராஜாங்க அமைச்சர் திரு. டி. பி அத்தப்பத்து நேற்றிரவுகாங்கேசன்துறையில் நடைபெற்ற தமிழரசு வாலிய முன்னணியின் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

தமிழில் பேசமுடியாமைக்கு வருத்தம் தெரிவித்துக்கொண்ட திரு. அத்தப்பத்து அடுத்ததடவைஇங்கு வரும்போது தமிழில் பேச முயற்சி செய்வதாகக் கூறினுர். திரு. அத்தப்பத்துவின் சிங்களப்பேச்சை ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தமிழில் மொழிபெயர்த்தார்.

உடுப்பிட்டி, புதன்
அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழாசிரியர் சங்கவட மராட்சிக் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம்கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் திரு. வே. செல்லையா தலைமையில் நடைபெற்றது புதியநிர்வாகிகள் விபரம் வருமாறு:-

தலைவர்:- திரு. செல்லையா, உபதலைவர்கள்; திருவாளர்கள் எம் வீ செல்லையா. க. இரத்தினம், காரியதரிசி: திரு க. சுப்பிரமணியம், பொருளாளர்; திரு. ச. விசுவநாதர், கணக்குப் பரிசோதகர், திரு. க. முருகப்பர், மூவரடங்கிய செயற்குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## ஸ்பென்சர் இராஜரத்தினம் கொலைவழக்கு

காலி, புதன்
கதிர்காமத்தில் கொலை செய்யப்பட்ட திரு. ஸ்பென்சர் ராஜரத்தினத்தின் கொலை வழக்கு, சுப்ரீம் கோர்ட்தென்பகுதி அஸைஸ் செப்டம்பரில் ஆரம்பமாகும்போது மறுவிசாரணைக்கு எடுக்கப்படும்.

பூநகரியின்முன்னுள் கிராம சேவகரான எதிரி வீரவாகு சின்னத்தம்பி விளக்கமறியலிருந்துநீதவான் திரு. ஜி. பி. ஏ சில்வா முன்னிலையில் ஆஜராக்கப்பட்டார்.

இவ்வழக்கில் முன்னுள் மாவட்ட நீதவான் திரு. ஸ்பென்சர் ராஜரத்தினத்தை கதிர்காமபடமொன்றில்வைத்து அவரதுமேசைக்கத்தியால் குத்திக் கொலை செய்ததாக எதிரி வீரவாகு சின்னத்தம்பி குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார்.

முந்திய விசாரணையில், எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. தண்டனைக்கெதிராகஎதிரி அப்பீல்செய்தார், அப்பீல் கோர்ட், தண்டனையை ரத்துச்செய்துவிட்டு, வேருேர் ஜூரிசபை முன்னிலையில் மறுவிசாரணை செய்யும்படி உத்தரவிட்டது.

## 'தான்தோன்றி' உற்சவம்

ஊர்காவற்றுறை, புதன்
நாரந்தனை வடக்கு தான்தோன்றீசுவரி என அழைக்கப்படும் ஸ்ரீமனேன்மணி அம்பாள் ஆலய உற்சவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது,

இவ்வாலயத்தில் திருவிழா காலங்களின் இரவில் ஸ்ரீ இராமநாதக்குருக்களால் ஸ்ரீ மகாமேருயந்திரபூசைநடைபெற்று வருகிறது.

இம்மாதம் 30-ந் திகதி மாலை நாகசமுத்திர தீர்த்த உற்சவமும், திருவூஞ்சலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.


வடமாகாணத்தில்
இரவு - பகல் சேவை செய்யும்
ஒரே ஒரு
ஸ்தாபனம்

**உவாட் அன் டேவி**

( ஆங்கில மருந்துச்சாலை )

148, நாவலர் வீதி, — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திர எண்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. இன்று நமது விருப்பத்துடன் தான் அமைச்சர்களை வரவேற்கிறோம். நாம் ஏன் இப்படி நடந்துகொள்கிறோம் என்பதனை விளக்கவேண்டியது எனது கடமையாகும்.

### ஐக்கியதேசியக் கட்சியுடன் ஏன் ஒத்துழைக்கிறோம்?

நாம் எந்தக் காரணத்துடன் ஐக்கிய தேசியக்கட்சியுடன் ஒத்துழைக்கிறோம் என்பதனைக் கூறுவது எனது கடமை.

1965-ல் தேர்தல் முடிந்ததும் எந்தக்கட்சி ஆட்சிக்கு வருவது என்றபிரச்னை எழுந்தது. யார் ஆட்சியை நடத்துவது என்பது எமது கையிலே இருந்தது. பல விதத்தில் ஐக்கியதேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும் எமது ஆதரவை நாடி நின்றார்கள். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தமிழர்களை எதிரிகளாக்கிக் கொண்டது. அதே நேரத்தில் ஐக்கியதேசியக்கட்சியினர் நமது சிலகுறைகளைத் தீர்க்க ஆயத்தமாக இருந்தார்கள். ஐக்கியதேசியக்கட்சியும் நாமும் கடந்த ஒரு வருடகாலமாக இக் குறைகள் சம்பந்தமாகபேச்சுநடத்தி வருகின்றோம். நாம் நடத்திய பேச்சுகளில் திரு. டட்லி சேனநாயகா, திரு ஜே. ஆர். ஜயவர்த்தன ஆகியோர் பங்குபற்றினர். அவர்கள் நமதுமொழியுரிமையை ஓரளவு கொடுக்க ஆயத்தமாக இருந்தார்கள். வேறு விஷயங்களிலும் நமது கொள்கைகளுக்கு இணக்கமான இருந்தார்கள். அதுவுமின்றி திரு. டட்லி சேனநாயகாவும். திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் நாம் பாராட்டும் வகையில் நடந்துகொண்டார்கள். ஆகையினுல் தான் நாம் ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து அரசாங்கம்அமைத்தோம் அதன்பயனுக நமது மொழிஉரிமை கிடைக்கக் கூடியதாகஉள்ளது. இதனுல் தான் திரு. டட்லி, திரு. ஜே. ஆர். ஆகியோரை நமது விருந்தினராக அழைத்து வரவேற்றோம்.

### போராட்டத்தை ஒத்திவைத்திருக்கிறோம்

டாக்டர் இ. எம். வி. நாகநாதன் பேசுகையில் கூறியதாவது;

தற்போது நாம் சிறிது காலத்துக்குப் போராட்டத்தை ஒத்திவைத்திருக்கின்றோம். இந்த உண்மையை நாம் ஒருபோதும் மறக்க முடியாது.

இப்பொழுது அவசரமான காலம் நிலவுகிறது. அரசியலில் அவசரகாலம் இல்லை. நாளுக்குநாள்வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது, இன்றுள்ள வாலிபர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னை எப்படி நாம் வாழ்வது என்பதுதான்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பேசுகையில் குறிப்பிட்டதாவட்:

### தலைநிமிர்ந்து வாழ...

தமிழ் மக்கள் இந்தநாட்டில் தலைநிமிர்ந்து வாழவேண்டும். தமது பண்பாடு, மொழி கலை அவர்கள் கஷ்டமின்றிப் பின்பற்றவேண்டும். தமிழ் பேசும் மக்கள் தமது சுயாதீனத்துடன் வாழவேண்டும் எனில் அது இணைப்பு ஆட்சியினுல் தான் முடியும்

நாம் இன்று தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்தாலும் நமது சமஷ்டிக் கொள்கை கைவிடப்படவில்லை. இந்த நாட்டில் ஒற்றையாட்சித்திட்டம் மறைந்து சமஷ்டிஆட்சி ஏற்படும் வரை நமது கொள்கைகளை கைவிடமுடியாது.

தமிழ் பேசும் மக்களுக்கென பூரணத்துவமுள்ள பல்கலைக் கழகமொன்று வேண்டுமென நாம் வாதாடி வருகின்றோம். தமிழ்மக்கள் தமது பண்பாட்டினைவளர்க்கத் தமிழ்ப்பல்கலைக்கழகம் அவசியம் வேண்டுமென்பதிற் தடையில்லை. திருமலையில் நிறுவ உத்தேசித்துள்ள தமிழ்ப்பல்கலைக்கழகம் பூரணத்துவமானது. கலை கலாச்சாரம், மதம் என்பனவற்றை வளர்க்கக்கூடியது.

நியாயவாதி திரு. மு. ஆலாலசுந்தரம், மௌலூர் மௌலானு ஆகியோரும் பேசினர்.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விழாவுக்கு ஹைகமிஷனர் சச்சார் சென்று ஆசிரியைகளுக்குச் சில நல்ல யோசனைகளைக் கூறினுர்.

''ஆசிரியத்தொழில் மிகப் புனிதமானது. தாய், தந்தை அடுத்தது குரு. இவர்களைத் தெய்வமாக மதிக்க வேண்டுமென்பது சாஸ்திரம். போதனையிலும் மார்க்க சாதனைமூலம் தான் ஆசிரியர்கள் மாணவரிடை மதிப்பையும், செல்வாக்கையும் பெறமுடியும்'' என்று சொல்லி ''மகாத்மா காந்தி எப்போதும் உரிமைகளைவிட கடமைகளையே வற்புறுத்துவார். ஒருவர் தம் கடமைகளைச் சரிவரச் செய்தால் உரிமைகள் தாமாகக் கிடைக்கும் என்பார். சிறப்பாக ஆசிரியைமார்கள் பிள்ளைகளுக்கு அன்பு முறையிலே கல்வி போதிக்க எல்லாத் தகுதிகளையும் பெற்றுள்ளனர்'' என்றார்.

''பல ஞானிகள், மேதைகள், மகாத்மாக்கள் இவர்களது பெருமைகளுக்கு அவர்களது தாய்மார்களும் மனைவிமார்களுமே காரணம். ஆகவே பராசக்தியின் வடிவங்களான ஆசிரியைகள் பிள்ளைகளை பெரிய மனிதர்களாக்கக் கூடிய சக்தி பெற்றவர்கள்''

என்று கூறி, தமது நன்றியைத் தெரிவித்து, நன்கு மொழிபெயர்த்த கல்லூரி அதிபரைப் பாராட்டினுர். திருமதிசபாரத்தினம்ஹைகமிஷனர் தம்பதிகளை வரவேற்றார். மகாத்மா காந்தியின் உருவப்படம் மேடையை அலங்கரித்தது.

ஹைகமிஷனரின் பல பேச்சுக்களும், மகாத்மா காந்தியின் உள்ளத்தையே பிரதிபலிப்பதாக இருந்தது.

ஃ ஃ ஃ

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் உற்சவத்தைப் பற்றி ஏன் விசேஷமாக எழுதவில்லையென்று ஒரன்பர் கேட்டார். குற்றம் தான். இதற்குப் பரிகாரமாக, சில நாட்களில் விசேஷ மலரை 'ஈழநாடு' வெளியிடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன்.

## தற்கொலைசெய்த இளைஞன்

### பொதுமக்களிடம் பொலிஸார் விபரம் கோருகின்றனர்

மாவிட்டபுரம், புதன்

நேற்று மாலை ரயிலுக்குப் பலியான ஒரு இளைஞர் பற்றிய விபரங்களை பொது மக்களிடம் பொலிசார் கோரியுள்ளனர்.

வடிவேலு என்று அழைக்கப்படும் சுமார் 20 வயதுள்ள இந்த இளைஞன்; நேற்று மாலை காங்கேசன் துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த ரயிலுக்குப் பலியானுன். இவரது மரணம் குறித்து நடைபெற்ற மரண விசாரணையில், ரயில் சென்றுகொண்டிருந்த பொழுது தண்டவாளத்தின் மீது அவர் தலையை வைத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவம் நேற்று மாலை காங்கேசன் துறை, மாவிட்டபுரம் ரயில் நிலையங்களுக்கிடையே நிகழ்ந்தது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஏ.குமரகுரு மரணவிசாரணை நடத்தினுர். விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

### பொதுமக்களிடம் பகிரங்க கோருகின்றனர்

உறவினர்கள் எவரும் உரிமை கோராததால் இந்த இளைஞரின் சடலம் இப்பொழுது பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிறது. இளைஞனின் உறவினர்களைப் பற்றிய விபரம் தெரிந்தவர்கள் உடனடியாகபொலிசாருக்கு அறிவிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

''ஐஸ்கிரீம்'' விற்பனை செய்பவராகக் கூறப்படும் இந்த இளைஞன் நொண்டியாகவே நடப்பான் என்று சொல்லப்படுகிறது. தலைமுடி, கட்டையாக வெட்டப்பட்டுள்ளது. இவரது பெயர் வடிவேலு.

இதுசம்பந்தமாக காங்கேசன்துறைபொலிஸ்நிலைய தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் திரு. எஸ். வி. மூர்த்தி விசாரணைகள் நடத்திவருகிறுர்.

## தொலைபேசிப்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யும் விவரித்த அந்த ஒலிப்பதிவில் ஒரு பகுதியைத் தாம் கேட்டதாக அவர் மேலும் தெரிவித்தார் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்காவுடன் தான் வந்த விஷயத்தை முடித்துக்கொண்டு பதினைந்து நிமிடங்களில் திரும்பி விட்டதாகவும் அவர் கூறினுர்.

62 வயதான திரு. பதிதீன் முகம்மது, 1962-ல் பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்றல் பற்றி சர்ச்சை இருந்ததாகக்கூறினுர் தான் தொலைபேசி மூலம் தூஷிக்கப்பட்டதாகவும், நாளுக்கு 50 தொடக்கம் 60 வரை தொலைபேசிப் பயமுறுத்தல்கள் தமக்குக்கிடைத்ததாகவும் அவர் தெரிவித்தார். ஒரு நாள் தன்னை திரு. எல். டி. டயஸ் தன் வீட்டுக்கு அழைத்ததாகவும், அங்கு தானும் அவரும், பாடசாலைகளை பொறுப்பேற்றல் பற்றி யாழ்ப்பாணம் அதிமேற்றிராணியாருக்கும் திரு. திருச்செல்வத்துக்குமிடையே நடைபெற்ற தொலைபேசி சம்பாஷணையின் விபரங்களை அளிக்கும் ஒலிப்பதிவைக் கேட்டதாகவும் அவர் கூறினுர். அச் சம்பாஷணையில் திரு. முகம்மதுவின் பெயரும் குறிப்பிடப் பட்டது. பள்ளிக் கூடங்களை அரசாங்கம் பொறுப்பேற்பதை எதிர்த்து ஏதோ நடவடிக்கை திட்டமிடப்படுவதாக அச் சம்பாஷணை தெரிவித்தது. திட்டமிடப்பட்ட நடவடிக்கை சதி நடவடிக்கையாகுமோவெனத் தம்மால் கூற முடியாதென்று திரு. முகம்மது கூறினுர். தொலைபேசி மூலம் வந்த பயமுறுத்தல் தமக்கு அச்சமளித்ததாக அவர் தெரிவித்தார். மேலும் பல சந்தர்ப்பங்களில் தனது தொலைபேசி ஒற்றுக் கேட்கப்படுவதாகத் தான் உணர்ந்ததாகவும் அவர் கூறினுர்.

திரு. சி. எச். எஸ். மார்ட்டினுக்கும் திரு. ஏ. பி. ஜயசூரியாவுக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணையில் தனது பெயர் குறிப்பிடப்படவில்லை எனவும், ஆகவே அதில் தான் அக்கறை காட்டவில்லையென்றும் திரு. முகம்மது தொடர்ந்து கூறினுர். தான் ஒலிப் பதிவு செய்தல் விஷயம் பற்றி அப்போதைய பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததாகவும், ஒற்றுக் கேட்டல் பற்றி ஏதாவது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மந்திரிகள் பொதுவாக ஆலோசித்ததாகவும் கூறிய திரு. முகம்மது, பின்னர் அந்தரங்கத்தில் தமது சாட்சியத்தை அளித்தார்.

## தமிழ் - சிங்கள....

(4.ம் பக்கத் தொடர்ச்சி)

டி. ஆர். ஜயவர்த்தன பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு அளித்த நன்கொடை, ஏரிக்கரைப் பத்திரிகை தாபனத்தை அவர் ஆரம்பித்தது ஆகியவை குறிப்பிடத்தக்கவையாகும். பாரம்பரியக் குடும்பத் தொடர்பும் பயிற்சியுமுடன் தனது சொந்தக் குணதிசயங்களும் சேர்ந்து திரு. ஜயவர்த்தன எந்த நாட்டின் தலைவர்களிடையேயும் உயரிய இடத்தைப் பெற்றிருக்கக் கூடியவர்.

### சிறந்த அரசியல்வாதி

கல்விமாளுக, பேச்சாளராக, நிர்வாகியாக, கட்சி இயக்க அமைப்பாளராக அரசியற் தலைவராக எல்லாத் துறைகளிலும் திரு. ஜயவர்த்தன குறிப்பிடத்தக்க திறமை வாய்ந்தவராவர். அவரது மனைவியைப் போல் அவரும் மதப்பற்றுக்கும், பக்திக்கும் பெயர் பெற்றவர். இருவரும் பல பௌத்தமத நிலையங்களுக்கு பெருந்தொகையில் நன்கொடையளித்துள்ளனர்.

திரு. ஜயவர்த்தனவின் சகோதரர்களில் பிரசித்தி பெற்ற ஒருவர் வழக்கறிஞர் திரு. எச். டபிள்யூ. ஜயவர்த்தன ஆவர். திறமைக்கும், கல்விக்கும் பெயர் பெற்ற இவர் குடும்பத்தின் மூத்தோர் போல மிகவும் மதிக்கப்படுகிறுர்.

### டட்லி — ஜயவர்த்தன கூட்டு

இலங்கை அரசியலில் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவும் [illegible] பெற்றுள்ள இடங்களைச் சில வருடங்களுக்கு முன் இந்திய அரசியலில் சர்தார் வல்லபாய் பட்டேலும் ஜவஹர்லால் நேருவும் பெற்றிருந்த இடங்களுடன் சில சமயம் ஒப்பிடுவது உண்டு. எல்லா அம்சங்களிலும் இந்த ஒப்புமை பொருந்தாவிடிலும், இதற்குப் போதிய அஸ்திவாரம் உண்டென்றே நான் கருதுகிறேன். இவர்கள் இருவரிடையேயுமுள்ள இந்த இணைப்பு ஏதோ ஒருவகையில் தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதும் நாட்டின் நலனுக்காக இவர்கள் இருவரது சேவைகளும் எப்பொழுதும் கிடைக்க வேண்டுமென்பதும் அநேக மக்களின் விருப்பமாகும்.

### தொண்டைத் தொடர்ந்து செய்வாரா?

சிங்கள-தமிழ் நட்புறவுக்கு அஸ்திவாரமிட்ட தனது தந்தை, மாமன்மாரது நல்ல தொண்டை திரு. ஜயவர்த்தன தொடர்ந்து செய்து முடிப்பாரென்றும் எல்லாக் காலத்துக்கும் நிலைநிற்கக் கூடியதும் அசைக்க முடியாததுமாக இந்த நட்புறவைச் செய்வாரெனவும் நம்புகிறோம்.

இந்தத் தொண்டை அவர் செய்து முடிப்பாரேயாயின், கடந்த, நிகழ், எதிர்காலங்களில் எந்த ஒரு இலங்கைத் தலைவரும் இந்நாட்டுக்குச் செய்யாத பெரும் சேவையொன்றைச் செய்தவராவார்.

## கோப்பாய் எம். பி. சிரமதானம்

யாழ்ப்பாணம், வியா.

போக்குவரத்துக்குத் தடையாக வீதியில் விழுந்து கிடந்த மரமொன்றை கோப்பாய் எம். பி. கதிரவேற்பிள்ளை தமது மனைவி சகிதமாக சிரமதானம்மூலம் அப்புறப்படுத்திய சம்பவம் நேற்று மாலை நிகழ்ந்தது.

வட்டுக்கோட்டை-அராலி வீதியில், தீப்பற்றி எரிந்துகொண்டிருந்த பெரிய மரமொன்று பாதையின் குறுக்கே விழுந்து போக்குவரத்துக்குத் தடையாகவிருந்தது. நேற்று மாலை இவ்வழியாக காரில் சேன்றுகொண்டிருந்த கோப்பாய் எம். பி. இதனைக் கண்டு காரிலிருந்தும் இறங்கி தமது மனைவியுடனும் காரிலிருந்த தமிழரசு வாலிபமுன்னணி நிர்வாகச்செயலாளர் திரு. எஸ், பாலசிங்கம் உதவியுடனும் மரத்தை அகற்றி சிரமதானத் தொண்டு புரிந்தார். இம்மரம் அகற்றப்படுவதற்கு முன்னர் இப்பாதை போக்குவரத்துக்குத் தடையாகவிருந்தது டன் வாகனங்கள் பாதையின் மற்றுமொரு வழியாகச் சென்றுகொண்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஓய்வுபெற்ற

## அரசாங்கஊழியருக்கு மீண்டும் வேலை?

யாழ்ப்பாணம், வியா.

அரசாங்கசேவையின் பழைய ஊழியர்கள் சம்பந்தமான பிரச்னைகள் அரசாங்கத்தின் கவனத்தில் இருப்பதாகவும்அப் பிரச்னைகளை விரைவில் நிவர்த்தி செய்ய முயற்சி எடுக்கப்படும் என்றும் அரசாங்கம் ஏற்கனவே தமது சங்கத்துக்கு அறிவித்திருப்பதாக வேலை இழந்த அரசாங்க சேவையாளர் சங்கத்தைச் சேர்ந்த ஒருபிரமுகர் நேற்று ஈழநாடுநிருபரிடம் கூறினுர்.

உத்தியோகமொழிகாரணமாக ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர் மீண்டும் சேவைக்கு எடுத்துக் கொள்ளப்படுவர் என்ற வகையில் அரசாங்கம் விரைவில்சுற்று நிருபம் ஒன்றை அனுப்பவிருப்பதாக வெளிவந்த செய்திகள் பற்றி குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினுர். பத்திரிகை செய்திகள் உண்மையாகத்தான் இருக்கும் என்றும் இவை அரசாங்கம் அனுப்பவிருக்கும் சுற்று நிருபத்தின் மூலம் உறுதியாகும் என்றும் அவர் கூறினுர்.

**வியாபாரம் பெருக விளம்பரம்செய்க**

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் மேலை வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org